பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 23 வெள்ளிக்கிழமை (06-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:72

## புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் படையினரால் தாக்கப்பட்டார்!

### தெல்லிப்பழையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.6

தெல்லிப்பழை எட்டாம் கட்டையடியில் வைத்து விடுதலைப் புலிகளின் தெல்லிப்பழைப் பிரதேசப் பொறுப்பாளர் ஜனா இராணுவத்தினரால் தாக்கப்பட்டிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

அந்தப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரணுக்குச் சமீபமாக உள்ள வீடு ஒன்றுக்குப் பிரஸ்தாப பொறுப்பாளர் நேற்றுக்காலை 9.30 மணியளவில் தமது உதவியாளர் ஒருவருடன் சென்றுள்ளார்.

தனது மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்திவிட்டு அவர் சென்ற சமயம், அங்கு விரைந்த படையினர் அவரைப் பிடித்துத் தாக்கியுள்ளனர். அவரது உதவியாளர் சிட்டு என்பவரும் தாக்குதலுக்கு இலக்கானார். அவரது மோட்டார் சைக்கிள் திறப்பும் பிடுங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

பொறுப்பாளரைத் தமது காவலரணுக்குப் படையினர் கூட்டிச்சென்றனர்.

அச்சமயம் பொதுமக்கள் அந்தப் பகுதியில் திரண்டனர். புலிகளின் பிரதேசப் பொறுப்பாளரை உடன் விடுவிக்கும்படி படையினரிடம் அவர்கள் கோரினர்.

நிலைமை மோசமடையவே, அங்கு வந்த தெல்லிப்பழை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி படையினருடன் உரையாடினார்.

அதன்பின் பொறுப்பாளர் விடுவிக்கப்பட்டார் மோட்டார் சைக்கிள் திறப்பும் மீள வழங்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## உடுவில் பிரதேச செயலகம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!

### 'பிக்கப்' வாகனமும் நொறுக்கப்பட்டது



தாக்கப்பட்ட 'பிக்கப்'

யாழ்ப்பாணம்,பெப்.6

உடுவில் பிரதேச செயலகக் கட்டடம் மற்றும் செயலக வாகனம் என்பன நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் இனந்தெரியாதோரால் அடித்துச் சேதமாக்கப்பட்டன.

செயலகத்தில் இரவுக் கடமையில் இருந்த காவலாளியை குப்புறப் படுக்குமாறு கோரிய இனந்தெரியாத குழு, செயலகத்தின் உட்புறமும் வெளிப்புறமும் அமைந்திருந்த யன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியது. அதன் பின் பிரதேச செயலக வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'பிக்கப்' வாகனமும் அடித்து நொறுக்கப்பட்டது. வாகனத்துக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்தவுடன் அங்கு விரைந்த பொலீஸாரும் இராணுவத் (16ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைய மக்களுக்கு அழைப்பு!





உண்ணாவிரதிகள் சோர்வுற்ற நிலையில் கிடப்பதை முதல் படத்தில் காண்கிறீர்கள். போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களோடு அமர்ந்திருந்து உரையாடுகின்ற அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரி ஒருவரை அடுத்த படத்தில் காணலாம். (மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்)

*(படங்கள்: தேவா)*

## உண்ணாவிரதிகளில் இருவர் மயக்கம்; அதிகாரிகள் சென்று தகவல் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்ரவரி6

**தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. வாழ்விட உரிமைகோரி வலி.வடக்கு மக்கள் ஆரம்பித்திருக்கின்ற இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள் உட்பட சகல தரப்பினரும் திரண்டு வந்து பங்குகொண்டு அவர்களது கோரிக்கைக்கு வலுச்சேர்க்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.**

பொது அமைப்புக்களைச் சார்ந்தோர் இன்றுமுதல் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஏகோபித்த ஆதரவை வெளிப்படுத்த வேண்டும் என்று வலி.வடக்கு, தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் கேட்டிருக்கின்றது.

வலி.வடக்கில் இயங்கும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பொது அமைப்புப் பிரதிநிதிகளும் உண்ணாவிரதத்தில் பங்குபற்றி ஆதரவு வழங்க வேண்டும் என்று ஒன்றியம் கேட்டுள்ளது.

### இருவர் மயக்கம்

உண்ணாவிரதத்தை ஆரம்பித்த 12 பேரில் இருவர் நேற்றுக்காலை மயக்கநிலையில் காணப்பட்டனர். மற்றொருவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார்.

வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக சுமார் ஆயிரம் பேர் மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

கண்காணிப்புக்குழுவின் மூன்று அதிகாரிகள் நேற்றுக்காலை உண்ணாவிரதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். அவர்களின் நலன்களையும் கேட்டறிந்தனர்.

அதன்பின் அவர்கள் வாகனத்தில் ஏறி யாழ்.நோக்கிப் புறப்படத் தயாராகினர். அச்சமயம் உண்ணாவிரதத்

(16ஆம் பக்கம் பார்க்க)

### மயக்கமுற்ற உண்ணாவிரதிக்கு குளுக்கோஸ்

வலி.வடக்கு,பெப்.6

வலி.வடக்கில் பிரதேச செயலகம் முன் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் 12 பேரில் செல்வராசா என்பவருக்கு நேற்று மாலை குளுக்கோஸ் ஏற்றப்பட்டது.

உண்ணாவிரதிகளில் இருவர் நேற்றுக்காலை முதல் மயக்கநிலையில் காணப்பட்டனர். அவர்களில் ஒருவரான எஸ்.செல்வராசாவுக்கு உண்ணாவிரத மேடையில் வைத்தே குளுக்கோஸ் ஏற்றப்பட்டது.அதன் பின்னர் அவரது உடல் நிலை ஓரளவு தேறிக் காணப்பட்டது.

இதேவேளை -

(16ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியிலும் போராட்டம் தொடர்கிறது

சாவகச்சேரி,பெப்.6

தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டமும் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

தென்மராட்சி தெற்குப் பிரதேசமான மறவன்புலோ, தனங்களப்பு ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கேட்டு அப்பகுதி மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மறவன்புலோவைச் சேர்ந்த செல்லக்கிளி ஆனந்தரஞ்சன் (வயது 42), தனங்களப்பைச் சேர்ந்த விநாசித்தம்பி கந்தையா (வயது 70) ஆகிய இருவரும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களில் ஆனந்தரஞ்சன் என்பவர் நீராகாரம் கூட அருந்தாமல் சாகும் வரையிலான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார். இவர்கள் இருவருக்கும் ஆதரவாக பலர் போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.


ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.



NSB NSB தேசிய சேமிப்பு வங்கி

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்

# தேர்தல் சின்னமான தாமரை மலரை தேர்தல் ஆணையாளர் நிராகரிப்பு!

### புனிதப் பொருள் என்பதால் பட்டியலில் இடம்பெறவில்லை

கொழும்பு.பெப்.6

சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. இணைந்த "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி"யின் தேர்தல் சின்னமாக தாமரை மலரை ஏற்றுக்கொள்ள தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க மறுத்துவிட்டார். தாமரை மலர் தவிர்ந்த வேறு ஒரு சின்னத்தைத் தெரிவு செய்து இன்று தமக்கு அறிவிக்குமாறும் ஆணையாளர் அம்முன்னணியிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

தேர்தல் ஆணையாளரிடமுள்ள தேர்தல் சின்னங்கள் பட்டியலில் தாமரை மலர் இல்லாததே அவரது மறுப்புக்குக் காரணமாகும். தாமரை மலர் பௌத்த மத வழிபாட்டுக்குரிய ஒரு புனிதப் பொருளாக இருந்து வருவதே அது தேர்தல் சின்னங்கள் பட்டியலில் இடம்பெறாததற்கான காரணமாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் சின்னமாக தாமரை மலரை அங்கீகரிக்குமாறு அம்முன்னணி கடந்த 26ஆம் திகதி தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பித்திருந்தது. அதையடுத்து, அது தொடர்பாக பேச்சு நடத்த முன்னணியின் பிரதிநிதி ஒருவரை கடந்த 3ஆம் திகதி அழைத்த தேர்தல் ஆணையாளர், முன்னணியின் விண்ணப்பத்தை நிராகரித்திருக்கிறார்.

தாமரை மலர் தவிர்ந்த வேறு ஒரு தேர்தல் சின்னத்தை தெரிவுசெய்து தமக்கு அறிவிக்கும்படியும் தேர்தல் ஆணையாளர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கடந்த ஜனவரி 20ஆம் திகதி இவ்விரு கட்சிகளும் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டபோது முன்னணியின சின்னம் தாமரைப்பூ என்றே பிரகடனப்படுத்தப்பட்டது. தொடர்ந்து 29ஆம் திகதி நடத்தப்பட்ட முதலாவது பொதுக் கூட்ட மேடையில் புதிய முன்னணியின் பெயருடன் தாமரைப்பூ சின்னமும் பொறிக்கப்பட்டிருந்தது. வைபவ ரீதியாக பிரகடனப்படுத்தப்பட்ட சின்னம் தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டது புதிய கட்சிக்கு ஒரு சகுணத் தடையாக அமைந்துவிட்டது என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

கட்சியின் தலைவர், செயலாளர் உட்பட நிர்வாகிகள் பட்டியல் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. நிர்வாகிகளைத் தெரிவுசெய்வதில் ஏற்பட்டிருக்கும் இழுபறி தீரவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

# 'ஹைஏஸ்' வானில் வந்த குழுவினால் சிறுவனின் தங்கச்சங்கிலி அபகரிப்பு

### குப்பிளானில் சம்பவம்

தெல்லிப்பழை,பெப்.6

'ஹைஏஸ்' வானில் வந்த இளைஞர் குழு சிறுவனின் கழுத்துச்சங்கிலியை அபகரித்த சம்பவம் ஒன்று கடந்த 2ஆம் திகதி குப்பிளான் தெற்கில் இடம்பெற்றது.

குப்பிளான் தெற்கைச் சேர்ந்த குடும்பமொன்றுடன் உறவு கொண்டிருந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் தனது நண்பர்கள் ஆறு பேருடன் அன்றையதினம் 'ஹைஏஸ்' வானில் குறித்த வீட்டிற்குச் சென்றதாகவும் -

அங்கு சிறுவனொருவனுடன் உரையாடிக்கொண்டிருந்த இக்குழுவினர் பின்னர் சிறுவன் கழுத்திலிருந்த சங்கிலியை அபகரித்துக் கொண்டு வானில் தப்பிச் சென்று விட்டதாகவும் - கூறப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர் சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, சுன்னாகம் பொலீஸார் விரைந்து நடவடிக்கை எடுத்தனர்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட வானுடன் அதிலிருந்த குறித்த இளைஞர் உட்பட 6 இளைஞர்களையும் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் கடந்த 3ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் வானைத் தடுத்து வைக்குமாறும் பொலீஸாருக்குப் பணித்தார். (எ-8-150)

## சுட்டுக்கொலை!

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருக்கும் மற்றொரு முக்கிய புள்ளி எனக் கூறப்படும் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். கொஹுவல, களுபோவில வீதியில் வைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று கொஹுவல பொலீஸார் தெரிவித்தனர்.

கொஹுவலையைச் சேர்ந்த 'குடு பால' என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இச்சம்பவத்தில் மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

களுபோவில வீதியில் ஒரு கடையின் எதிரே நின்று கொண்டிருந்த அவரை வெள்ளைநிற 'ஹைஏஸ்' வானில் வந்த சிலர் சுட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர் என்று தெரிவித்திருப்பதாக பொலீஸார் கூறினர்.

சுடப்பட்ட அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் இறந்துள்ளார். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# 'பக்ஸ் மணிஓடர்' மூலம் பணம் அனுப்பும் சேவை!

### தபாலகங்களில் அறிமுகம்

யாழ்ப்பாணம்,பெப்.6

வெளியூர்களுக்கு "பக்ஸ் மணியோடர் சேவை" மூலம் துரிதகதியில் பணம் அனுப்பும் பணி குடாநாட்டிலுள்ள பிரதான தபாலகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என யாழ். தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தபாலகங்களில் இடம்பெறும் "பக்ஸ் மணியோடர் மூலம்" பணம் அனுப்பும் நடவடிக்கை தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக, அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ் குடாநாட்டில் உள்ள பிரதான நகரங்களில் உள்ள தபாலகங்களில இந்தச் சேவை நடைபெறுகிறது. வெளியிடங்களுக்கு அவசர தேவைக்காகப் பணம் அனுப்புவோர் சுமார் 10 ஆயிரத்துக்கும் குறைந்த தொகையை இதன மூலம் அனுப்பிக்கொள்ளமுடியும்.

இந்தச் சேவைக்கு தபாலகங்களில் மணியோடர் அனுப்புவதற்கு வழமையாக அறவிடப்படும் கட்டணத்துடன் மேலதிகமாக, "பக்ஸ் அனுப்புவதற்குரிய கட்டணம் அறவிடப்படுகின்றது.

அத்துடன், தகவல்களை பக்ஸ் மணியோடர் மூலம் அனுப்புவதற்குரிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதில முதற்பத்துச் சொற்களையும் எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாக அனுப்பிக்கொள்ளமுடியும். மேலதிகமாக, சொற்கள் சேர்க்கப்படுமாயின் அச்சொற்களில் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு ரூபாவை கட்டணமாகச் செலுத்த வேண்டியநிலை ஏற்படும்.

இந்தச் சேவையுடன் தொலைபேசித தபால்சேவை, பக்ஸ் மூலம் தகவல அனுப்பும் சேவை என்பனவும் தபாலகங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.

இதேவேளை, யாழ் மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்குப் பொதிகள மூலம் அனுப்பப்படும் பொருள்களின நிறையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சுமார் 10கிலோகிராம் நிறைக்குட்பட்ட பொருள்களையே பொதிகள் மூலம் ஏனைய இடங்களுக்கு அனுப்பும் நடைமுறை இருந்து வந்தது. ஆனால், தற்போது அவ்வாறு அனுப்பப்படும் பொருள்களின் நிறை 20கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது - என்றார். (எ-5)

# விவசாயிகள் இன்று கொழும்பில் சாகும் வரையிலான உண்ணாவிரதம்

### உர விலையைக் குறைக்கக் கோருகிறார்கள்

அகில இலங்கை விவசாயிகளின் சங்கம் உரமானியம் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவது எனத் தீர்மானித்துள்ளது. இதனபடி இந்தப் போராட்டம் இன்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்படும்.

100 கிலோ எடை கொண்ட யூரியா உரத்தின் விலையை 350 ரூபாவிலிருந்து 800 ரூபா வரை அரசு அதிகரித்துள்ளதாக அந்தச் சங்கம் குற்றஞ் சாட்டுகின்றது.

விலையைப் பழைய மட்டத்திற்கு கொண்டு வரும்வரை தமது போராட்டம் தொடரும் என்று அது சுட்டிக் காட்டியுள்ளது.

அதேவேளை, விவசாயிகள் அநுராதபுரத்தில் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொணடோர் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பற்றி பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துளளனர். அநுராதபுர பிரதேச சபையின் அங்கத்தவர் இருவர் தாக்குதலில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இவர்களைக் கைது செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். தாக்குதலில் காயமடைந்த ஒரு விவசாயி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஐ.ஜி.பிக்கு மேலும் 6 மாத சேவை நீடிப்பு

பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் சேவைக்காலம் மேலும் ஆறு மாதங்களால் நீடிக்கப்படவிருக்கிறது. அவரது சேவையை நீடிப்பதற்கான சிபாரிசை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசமைப்புச் சபையிடம் தெரிவித்திருக்கிறார்.

60 வயது பூர்த்தியடைவதால் பொலீஸ்மா அதிபர் எதிர்வரும் 19ஆம் திகதி ஓய்வுபெறவிருப்பதை கவனத்தில் கொண்டே ஜனாதிபதி இச்சிபாரிசைச் செய்திருக்கிறார்.

இச்சிபாரிசு குறித்து ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்வதற்காக அரசமைப்புச்சபை எதிர்வரும் 13ஆம் திகதி கூடுமென சபையின் செயலாளரான தம்மிக கித்துல்கொட தெரிவித்திருக்கிறார்.

# திடீர் பொதுத் தேர்தல் வேண்டாம்; புலிகளுடன் உடனடியாகப் பேசுங்கள்

### ஜனாதிபதி, பிரதமரை சமாதான அமைப்பு நாளை கோரும்

திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டாம் என்று ஜனாதிபதியிடமும், புலிகளுடன் உடனடியாகப பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடமும் கோரி நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

சமாதானம் மற்றும் ஜனநாயகத்துக்கான அமைப்பு இக்கூட்டத்தை நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது.


அவ்வாறே, அரசியல் ஸ்திரமற்ற நிலையால் மக்களின் வாழ்க்கை பாதிக்கப்படுவதைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இக்கூட்டத்தில் ஜனாதிபதியையும் பிரதமரையும் கோருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் தலைவர்களின் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

## தெல்லிப்பழையில் நேற்று...




சோர்வுற்ற நிலையில் உண்ணாவிரதிகள்.



உண்ணாவிரதிகள் மத்தியில் மாவை எம்.பி.



தகவல் சேகரிக்கும் படை அதிகாரிகள்.



கண்காணிப்புக் குழுவினரும் பிரசன்னம்.
(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்.)

# கட்டுநாயக்க விமான ஓடுபாதையில் சரக்கு விமானம் மோதி விபத்து!

### 10 மணி நேரமாக விமான சேவைகள் நிறுத்தம்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடந்த புதன்கிழமை இரவு சரக்கு விமானம் ஒன்று தரையிறங்கும் போது விபத்துக்குள்ளாகியது. இவ்விபத்தில் விமான ஓடுபாதையும் சேதமடைந்ததால் விமான நிலையம நேற்றுக்காலை 8.15 மணிவரை - சுமார் 10 மணி நேரமாக விமானங்களுக்கு மூடப்பட்டிருந்தது.

'எக்ஸ்போ ஏவியேசன்' என்னும் இலங்கை விமானச் சேவை நிறுவனம ஒன்றினால் இயக்கப்படும் இந்த 'ஐ.எல். 18' சரக்கு விமானம் டுபாயிலிருந்து கொழும்பு திரும்பியபோதே விபத்துக்குள்ளானது.

விமானம் தரையிறங்கும் போது அதன் முன்புறச் சக்கரம் வெளியில் வரத்தவறியதால் விமானம் ஓடுபாதையில் மோதி விபத்துக்குள்ளானது என்று விமான நிலைய அதிகாரி ஒருவர் கூறினார். இவ்விபத்தில் எவரும் காயமடையவில்லை.

விமான ஓடுபாதையில் பல மின் விளக்குகளும் விமானத்தின் இடதுபுற இயந்திரங்களும் முற்றாகச சேதமடைந்தன. ஓடுபாதைக்கு சிறிதளவே சேதம் ஏற்பட்டதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

ஓடுபாதையின் மத்தியில் படுத்துவிட்ட விமானத்தை அங்கிருந்து அகற்றி, ஓடுபாதை, மின்விளக்குகளைத் திருத்தும் வரை விமான நிலையம் மூடப்பட்டிருந்தது.

கொழும்பு நோக்கி வந்த விமானங்கள் சென்னை விமான நிலையத்துக்குத் திசைதிருப்பப்பட்டன. விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்ட போது, நேற்றுக்காலை 8.18 மணிக்கு சூரிச்சிலிருந்து வந்த விமானம் தரையிறங்கியது. (ஐ)

# அணு இரகசியங்களை விற்ற விஞ்ஞானி பாக்.அதிபரிடம் மன்னிப்புக் கோரினார்!

அணுவாயுத இரகசியங்களை வெளிநாடுகளுக்குக் கடத்தியது உண்மைதான் என்று பாகிஸ்தான் அணுவிஞ்ஞானி டாக்டர் காதிர்கான் தனக்கெதிரான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார். இதற்காகத் தனக்கு மன்னிப்பு வழங்கும்படி அவர் ஜனாதிபதி முஷாரப்பைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து வடகொரியா, ஈரான், லிபியா ஆகிய நாடுகளுக்கு அணுஆயுதத் தொழில்நுட்ப இரகசியங்கள் விற்கப்பட்டமை பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. பாகிஸ்தானின் 'அணுகுண்டு தொழில்நுட்பத் தந்தை' என்று அழைக்கப்படும் டாக்டர் ஏ.காதிர்கான் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக பிரதமரின் ஆலோசகர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இந்த நிலையில், டாக்டர் கானின நெருங்கிய நண்பர் பருக் அகமது, அவருடைய தனிச்செயலாளர் மேஜர் இஸ்லாமுல் ஹக், கானின் ஆராய்ச்சி மைய உயர் அதிகாரி நசீர் மற்றும் பாதுகாப்பு அதிகாரி சஜ்வாக் ஆகிய 4பேர் இந்த விவகாரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 3மாத காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.



டாக்டர் கானுக்கு ஆதரவாகப் பாகிஸ்தானில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்

டாக்டர் கான் கைதுசெய்யப்படுவாரா?- என்பது குறித்து அதிகாரபூர்வமான எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. ஆனால், அவரும் கைதானவர்களுடன் வீட்டுக்காவலில இருந்து வருகிறார் என்று அவருடைய தனிச்செயலாளரின் மனைவி கூறியிருந்தார்.

இதற்கிடையில், இந்தப் பிரச்சினை குறித்து, பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்புடன் டாக்டர் கான் சந்தித்துப் பேசினார் என்று தகவல் வெளியாகியிருக்கிறது. விசாரணையின போது அணு ஆயுதத் தொழில்நுட்பக் கடத்தலை கான் ஒப்புக்கொண்டார் என்றும்-

அதைத் தொடர்ந்து, முஷாரப்புடன் சந்திப்பு நடந்ததாகவும் கூறப்படுகிறது. டாக்டர் காதிர்கான், அணு விஞ்ஞானிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு உண்மைதான் என்று கூறி, தவறுக்கு முழுபொறுப்பையும் தான் ஏற்றுக்கொண்டார். பின்னர் ராவல் பிண்டியில் ஜனாதிபதி முஷாரப்பைச் சந்தித்து 40 நிமிடம் பேசினார். அப்போது, செய்த தவறுக்காக மேல நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மன்னிப்பு வழங்கும்படி அவர் கோரிக்கை விடுத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.



வியாட்நாமின் ஹோசிமின் நகருக்கு அருகே உள்ள ஒரு கிராமத்தின் பெயர் அமைதி கிராமம். இந்தக் கிராமத்தில் பிறந்த குழந்தைகளில் மூன்றில் 2குழந்தைகள் குறைபாடுகளுடனேயே பிறக்கின்றன. கண்களே இல்லாமல் குழந்தைகள் பிறந்துள்ளன.

இந்தக் குழந்தைகளின் தலைகள் சிதைந்த வடிவில் உள்ளன. கண்கள் வெளியே பிதுங்கிய நிலையிலும் வாய் சிறுத்துப்போன நிலையிலும் குழந்தைகள் பிறக்கின்றன. வியட்நாம் போரின்போது கொடிய இரசாயன வாயுக்களை அமெரிக்கா பயன்படுத்தியதால் அவை பெண்களை மிகவும் பாதித்துள்ளன. அவர்களது வயிற்றில் வளரும் குழந்தைகளும் இப்படிப்பட்ட குறைபாடுகளுடன் பிறக்கின்றன.

வியட்நாம் யுத்தம் முடிவடைந்து 35 வருடங்கள் ஆகிவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# எந்த நாட்டின் உளவு அமைப்பும் துல்லியத் தகவலைத் தருவதில்லை!

## இது தனது அனுபவம் என்கிறார் அனான்

நியூயோர்க்,பெப்.6

எந்த நாட்டின் உளவு நிறுவனமானாலும் அது துல்லியமாகத் தகவலகளைத் தரமுடியாது என்பதே தன்னுடைய அனுபவம் என்று ஐநா. செயலாளர் நாயகம் கோபி அனான் கருத்துத தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்க உளவு நிறுவனமும், பிரிட்டிஷ் உளவு நிறுவனமும் தங்கள் நாட்டு அரசியல் தலைமைகளுக்கு தகவல்களை அளித்தன. இதை வைத்து இருநாடுகளும் ஈராக் மீது படை எடுத்தன.

ஈராக்கைக் கைப்பற்றிய பிறகு சல்லடை போட்டுத் தேடியும் ஓர் இடத்திலும் எந்தப் பேரழிவு ஆயுதங்களையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் சர்வதேச அரங்கில் இவ்விரு நாடுகளின் உளவு அமைப்புகளும் கேலிக்கிடமாகி வருகின்றன. இந்த நிலையிலேயே கோபி அனான மேற்கத்தைய நாடுகளின் உளவு அமைப்புகள் குறித்து தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

(ஓ)

# ஓடி ஒளியக்கூடிய குற்றவாளியா வைகோ? பிணை நிபந்தனை குறித்து நீதிபதிகள் விசனம்

சென்னை,பெப்.6

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஓடி ஒளிந்து விடக்கூடிய குற்றவாளியா? இவ்வாறு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் விசனத்துடன் கேள்வி எழுப்பினார்கள்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியவர் என்ற குற்றச்சாட்டில் வைகோவை தமிழக அரசு 'பொடா' சட்டத்தின்கீழ் கைது செய்தது. தன்னைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி அவர் 'பொடா' நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார். கடுமையான பல நிபந்தனைகளின் பேரிலேயே பிணையில் செல்ல 'பொடா' நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதனால் வைகோவுக்கு பொடா நீதிமன்றம் பிணையில் செல்ல விதித்த 13 நிபந்தனைகளில மூன்றை ரத்துச்செய்ய வேண் என்று வைகோ சார்பில் மனு ஒன்று சென்னை மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழு வைகோவுக்குப் பிணை அனுமதி வழங்குவதற்கு 'பொடா' நீதிமன்றம் விதித்த நிபந்தனைகள் குறித்து விசனம் தெரிவித்தது. பொடா நீதிமன்றம் தேவையில்லாமல் அதிகப்படியாக நிபந்தனைகளை விதித்திருக்கிறது. ஓடி ஒளித்துக்கொள்ளக்கூடிய குற்றவாளியா வைகோ? என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

அவர்கள் தமது தீர்ப்பில் கூறியதாவது:-

சென்னை நகருக்கு வெளியே செல்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டிய தேவையில்லை. விசாரணை அதிகாரிக்குத் தெரியப்படுத்தினால் போதுமானது. விடுமுறை நாள்களில் நீதிவான்முன் வைகோ ஆஜராகத் தேவையில்லை.

பொடா நீதிமன்றத்தின் மற்ற நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாக அவர் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யத் தேவையில்லை. எழுத்து பூர்வமாக உறுதி அளித்தாலே போதும் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

## வைகோ நாளை விடுதலை?

சென்னை, பெப்.6

வேலூர் மத்திய சிறையில் கடந்த 576 நாள்களாக இருந்து வரும் வைகோ, நாளை சனிக்கிழமை விடுதலை ஆவார் என்று ம.தி.மு.கவினர் எதிர்பார்க்கின்றனர்.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக கடந்த 2002ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் திகதி பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார் வைகோ.

கடும் நிபந்தனைகளை ஏற்றால் தான் பிணையில விடுதலை செய்யப படுவார் என்று பொடா நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது. அந்த நிபந்தனைகளை ஏற்க மறுத்து, உயர் நீதிமன்றத்தில வைகோ முறையிட்டதன் பேரில் நிபந்தனைகள் தளர்த்தப்பட்டன. நீதிமன்றத்துக்கு நேரில சென்று கருணாநிதி விடுத்த வேண்டுகோளை ஏற்று, நிபந்தனைப் பிணையில் வெளியே வருவதாக வைகோ கடந்த புதன் கிழமை அறிவித்தார். உயர் நீதிமன்ற உத்தரவு நகல் கிடைத்ததும், பிணையாளிகளை ஆஜர்படுத்த ம.தி.மு.கவினர் திட்டமிட்டுள்ளனர். இதையடுத்து, வைகோ நாளை விடுதலை ஆவார் என்று நம்பப் படுகிறது.



தன்னைப்பார்க்க பொடா நீதிமன்றத்துக்கு வந்த கருணாநிதியை வழியனுப்பி வைக்கிறார் வைகோ.

# கருணாநிதி - வைகோ உருக்கமான சந்திப்பு

சென்னை, பெப் 6

வைகோ பொடாவில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டபோது தி.மு.க. தலைவர் கருணாநிதி வேலூர் சிறைக்குச் சென்று அவரைப் பார்த்தார்.

அதன் பிறகு நேற்றுமுன்தினம் மீண்டும் வைகோவை 'பொடா' நீதிமன்றில் பார்த்தார். இந்தச் சந்திப்பு உருக்கமாக இருந்தது.

வைகோவை காண கருணாநிதி நீதிமன்றத்துக்கு முன்கூட்டியே வந்து காத்து இருந்தார்.

ம.தி.மு.க. நிர்வாகிகள் அவரை ஓர் அறைக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்திருந்தனர்.

வேலூர் சிறையில் இருந்து நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட வைகோவிடம் கருணாநிதி வந்து காத்திருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக கருணாநிதி இருந்த அறைக்கு வைகோ சென்றார். கருணாநிதியை பார்த்ததும் வைகோ உணர்ச்சி வசப்பட்டுக் கண் கலங்கினார். கருணாநிதியின் கைகளை பற்றிக் கொண்டு 'எனக்காக நீங்கள் ஏன் இங்கு காத்திருக்கிறீர்கள்? ஏன் நீங்கள் இங்கு வந்து கஷ்டப்படுகிறீர்கள். ஒரு கடிதம் அனுப்பி இருக்கலாமே?' என்று உருக்கத்துடன் கூறினார்.

வைகோவை கருணாநிதி தேற்றினார். பின்னர் நீதிமன்றத்தை விட்டு கருணாநிதி புறப்பட்டபோது அவருக்கு வைகோ சால்வை அணிவித்தார். கார் வரை சென்று கருணாநிதியை வழியனுப்பி வைத்தார்.

# 'போபஸ்' பீரங்கி பேர ஊழலில் ராஜீவுக்குத் தொடர்பில்லையாம்

புதுடில்லி,பெப்.6

இந்திய இராணுவத்துக்கு "போபஸ்' பீரங்கிகளை வாங்கியதில் இடம் பெற்ற ஊழலில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்குத் தொடர்பு இல்லை என்று டில்லி உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

ராஜீவ்காந்தி இந்தியப் பிரதமராகப் பதவிவகித்தபோது, இந்திய இராணுவத்துக்கு சுவீடனைச் சேர்ந்த ஏ.பி. 'போபஸ்' நிறுவனத்திடமிருந்து 'போபஸ்' ரகப் பீரங்கிகள் வாங்கப்பட்டன.

இந்தப் பீரங்கிகள் தரம் மற்றும் செயல்திறன் குறைந்தவை என்றும்

இவற்றை கொள்வனவு செய்ததற்காக பெரும் தொகை லஞ்சமாக வழங்கப்பட்டதாகவும் -

அப்போது எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

இதனைத் தொடர்ந்து இந்திய மத்திய புலனாய்வுத்துறை இது குறித்து விசாரனை நடத்தியது. விசாரணையின் முடிவில் ராஜீவ்காந்தி, அவரது இத்தாலிய மனைவியான சோனியாவின் உறவினர் குவாத்ரோச்சி, இந்தியத் தொழிலதிபர்களான இந்துஜா சகோதரர்கள் ஆகியோர் இந்த ஊழலில் பயனடைந்தவர்கள் என்று புலனாய்வுத்துறை தெரிவித்தது. இந்த ஊழல் தொடர்பாக சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்தல் செய்யப்பட்டது.

இந்த ஊழலில் பெரும் புள்ளிகள் சம்பந்தப்பட்ட நிலையில் இந்த வழக்கு பல வருடங்களாகவே முடிவின்றித் தொடர்கிறது.

இந்த நிலையில் டில்லி உயர் நீதிமன்றத்தில் இந்துஜா சகோதரர்கள் தம்மை வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரித் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பிலேயே போபஸ் ஊழலில் ராஜீவ் காந்திக்கு தொடர்பிருப்பதாக நிரூபிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்துஜா சகோதரர்களையும் ஊழல் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்த உயர் நீதிமன்றம் மோசடிக் குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

பீரங்கிகளை விற்ற சுவீடன் நிறுவனம் அது தொடர்பான ஆவணங்களை திருத்தியமை புலனாய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு, அது குறித்து வழக்குத் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஓ)

# இந்திய நாடாளுமன்றத்துக்கு ஏப்ரல் 15 முதல்கட்டத் தேர்தல்

புதுடில்லி,பெப்.6

இந்திய நாடாளுமன்றத்துக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி முதல்கட்டத் தேர்தலை நடத்துவது என்று இந்தியத் தேர்தல் அதிகாரிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்திய நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத்தொடர் நேற்றுடன் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படி அமைச்சரவை ஜனாதிபதிக்கு சிபார்சு செய்யும். அதனை ஏற்று நாடாளுமன்றம் இன்று கலைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் முடிந்து புதிய ஆட்சி அமையும் வரை பாரதீய ஜனதாகட்சி தலைமையிலான தற்போதைய அரசு காபந்து அரசாகச் செயற்படும்


இந்த நிலையில் புதுடில்லியில் தேர்தல் ஆணையகத்தின் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.


தேர்தலை நான்கு கட்டங்களாக நடத்துவது என்றும் -

அதில் முதல் கட்ட வாக்களிப்பை ஏப்ரல் 15 ஆம் திகதி நடத்துவது என்றும் -

எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிக்கு முன் தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தையும் முடித்து விடுவது என்றும் - இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதன்படி மே 7 ஆம் திகதி புதிய அரசு பதவியேற்கக்கூடும். ஆனால் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் அடுத்த அரசு பதவியேற்பது தாமதமாகலாம்.

(ஓ)









தனங்களப்பு, மறவன்புலவு பகுதிகளில் மீளக்குடியமரக் கோரி சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்ற மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டப் படங்கள். இடது - பிரதேச செயல கம் முன்பாக இராணுவத்தினர், மத்தி - போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான மக்கள், வலது - உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள செல்லக்கிளி ஆனந்தரஞ்சன் மற்றும் விநாசித்தம்பி கந்தையா.



சொந்த ஊர்போக வழிகேட்டால் சுட்டெரிக்கும் வெயிலில் வெந்துபோக விடுகிறார்கள். சாவகச்சேரி பிரதேச செயலகம் முன் கொளுத்தும் வெயில் தாளாமல் அதிலிருந்து தப்ப முயற்சிக்கும் பெண்கள்.




பொலீஸார் - மக்களுடன் கண்காணிப்புக் குழு அலுவலர்கள் சமரசம் முயற்சி





வலி.வடக்கு பிரதேச செயலகம் முன்பாக அப்பகுதி மக்கள் மறியற் போர்.



காணாமற்போன உறவுகள் வரும் வரும் என்று காத்திருந்தே கண்கள் பூத்துப் போச்சு. ஆதரிப்பார் யாருமின்றி உறவுகளைப் பறிகொடுத்து விட்டு செயலகம் முன் அமர்ந்திருக்கும் பெண்கள்.



கடந்த 12 வருடங்களுக்கு மேலாகப் போராட்டம் தானே வாழ்க்கை என்று ஆகிப்போச்சு. விரக்தியின் விளிம்பில் ஒருதாய்.





56 ஆவது சுதந்திரதின துக்க தின அனுஷ்டிப்பு யாழ்.குடாநாட்டில்...

படங்கள்: பிரேம்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# உதயன்

## 'உனக்கில்லையடி ஊருக்குத்தான் உபதேசம்'

இலங்கையின் சுதந்திரதினத்தை ஒட்டி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் நாட்டுமக்களுக்கு உரை நிகழ்த்தினார். அந்த உரையில் அவர் பல நல்லுபதேசங்களைச் செய்யத் தவறவில்லை.

ஆனால், அவையனைத்தையுமே முதலில் கைக்கொள்ள வேண்டியவர் அவர்தான் என்பதே இதில் வேடிக்கையான விடயமாகும்.

*"இப்போது கிடைத்திருப்பது பொன்னான சந்தர்ப்பம்.*

*இதிலிருந்து ஆக்கபூர்வமான அறுவடையை நாம் பெறவேண்டும். அப்படிச் செய்வதற்கு குறுகிய மற்றும் சொந்த நலன்களை நாம் புறத்தே ஒதுக்கிவைக்க வேண்டும். கட்சி வேறுபாடுகளையும் சொந்த விருப்புக்களையும் தள்ளிவைக்கவேண்டும். எமது குறிக்கோளை அடைவதற்கு ஒன்றிணைய வேண்டும்."* - இது அவரது சுதந்திர தின உபதேசங்களுள் ஒன்று.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்படவேண்டும். தமிழ்ப்பேசும் மக்களுக்கும் பெரும்பான்மை சிங்களவர்களுக்கும் இடையிலான பிணக்கு சமாதான முறையில் தீர்க்கப்படவேண்டும்.

இந்தத் தீர்வு முயற்சிக்காக தமிழர் தரப்பு ஐக்கியப்பட்டு நிற்கின்றது. சிங்களவர் தரப்பில்தான் இழுபறி; ஐக்கியமின்மை; குழப்பம்.

எனவே, சிங்களவர் தரப்பின் ஒற்றுமையைத்தான் ஜனாதிபதி சந்திரிகா சுதந்திரதின உரையில் வலியுறுத்தியிருக்கிறார் எனக் கொள்ளலாம்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் இந்தப் பொன்னான சந்தர்ப்பம் இப்போது தடைப்பட்டு நிற்கின்றது. இதற்கு யார் காரணம்? தனிப்பட்ட குறுகிய அரசியல் லாபத்துக்காக - கட்சி அரசியலுக்காக - அமைதி முயற்சிகளை இன்று முறித்துப் போட்டவர் யார்? இதுவரை மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளைக் குழப்புவதைக் கைவிட்டு, அந்த முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் இப்போதாவது இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு யாருடையது?

இக்கேள்விகளுக்கான பதில், ஜனாதிபதியின் தற்போதைய உபதேசம் யாருக்கு உரியது என்பதைத் தெளிவுபடுத்தும்.

ஜனாதிபதியின் "நல்லுபதேசத்தில்" முன்னுக்குப் பின் முரணான அம்சங்கள் உள்ளே புதைந்து கிடப்பதும் அவதானிக்கத்தக்கது.

*"அரசியல் முரண்பாட்டுக்கு யுத்தமும் ஆயுதமோதல்களுமே தீர்வு என்பதை தெற்கில் உள்ள சகல அரசியல் சக்திகளுமே இப்போது நிராகரித்துள்ளன. பேச்சுகள், கலந்துரையாடல்கள், இணக்கப்பாடுகள் என்பவற்றின் பாதையில் செல்வதற்கே அவை விருப்பம் கொண்டுள்ளன"* - என்கிறார் ஜனாதிபதி.

ஆனால், ஜே.வி.பி., சிஹல உறுமய மற்றும் தீவிரப் பேரினவாதப் போக்குடைய கட்சிகள் இந்த நிலைப்பாட்டுக்கு எவ்வளவு தூரம் இணக்கம் கொண்டிருக்கின்றன என்பது சந்தேகமே.

"ஈழத் தமிழரின் சிக்கல் இனப்பிரச்சினையல்ல. அது பயங்கரவாதப் பிரச்சினை. அதனை இராணுவ ரீதியில்தான் அடக்கவேண்டும்" - என்று இந்தப் பேரினவாதக் கட்சிகள் மீண்டும்மீண்டும் வலியுறுத்தி கூச்சல் போட்டு வருகின்றன.

இந்தக் கட்சிகளுடன்தான் ஜனாதிபதி கூட்டமைக்கின்றார்.

*"நாட்டின் கடுமையான அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு சகல அரசியல் சக்திகளும் ஐக்கியப்படவேண்டும். அந்தத் தொலைநோக்கில் நான் இன்னும் உறுதியாக உள்ளேன். அந்தக் குறிக்கோளை இலக்குவைத்து நான் தொடர்ந்து செயலாற்றி வருகிறேன். இந்தத் தேவைப்பாட்டின் அடிப்படையிலேயே பொ.ஐ.மு. ஏனைய பல்வேறு அரசியல் சக்திகளுடன் இணைந்துகொள்வது சாத்தியமாகியுள்ளது"* - என்று தனது உரையில் ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்.

அமைதி வழியில் - பேச்சுகள் வாயிலாக - அதிகாரப் பகிர்வின் மூலம் - அமைதித் தீர்வு காணப்படவேண்டும். இதனை அடியோடு எதிர்க்கும் தீவிர பேரினவாத சக்திகளைத்தான் ஜனாதிபதி குமாரதுங்க இப்போது தமது தரப்போடு இறுகச் சேர்த்துக்கொண்டிருக்கின்றார். அவற்றோடு கூட்டுச் சேர்ந்துகொண்டுதான் 'அமைதித் தீர்வுக்கான ஐக்கியம்' குறித்து அவர் புலம்புகின்றார்.

ஆக, அவரது சுதந்திர தினப் பேச்சை செவிமடுக்கும்போது "உனக்கில்லையடி என் கண்ணே! ஊருக்குத்தான் உபதேசம்!" என்ற பேச்சு வழக்குத்தான் நினைவுக்கு வருகின்றது.

முதிர்ச்சியுள்ள நல்ல தலைவர்களின் தேவையையும் ஜனாதிபதி தமது சுதந்திரதின உரையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஆம், அது சரியே. இலங்கை அரசியல் இன்று இவ்வளவு சீரழிந்த நிலைக்குக் காரணம் அரசியல் முதிர்ச்சியும், தூரநோக்கும், தீர்க்க தரிசனமும் உள்ள தலைவர்கள் தென்னிலங்கையில் முகிழாமல் போனமையே ஆகும். அத்தகைய தலைவர்கள் உருவாவதற்கு இப்போதைய 'நந்திகள்' இடம் விட்டுவிலகி, ஒதுங்கி, இடம் கொடுப்பதே முக்கியம்.

அவ்வாறு முதிர்ச்சியுள்ள தலைமை தென்னிலங்கையில் உருவானால் மட்டுமே சமாதான வழியில் அமைதித்தீர்வு சாத்தியமாவது சுலபமாகும்.

# தென்னிலங்கை அதிகாரப்போட்டியால் இனப்பிரச்சினைத் தீர்வு பந்தாடப்படுகிறது

## புதிய ஜனநாயகக்கட்சிச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

தென்னிலங்கையில் நிலவும் அதிகாரப்போட்டி காரணமாக, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு பந்தாடப்படும் நிலையே உருவாகியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் புதிய ஜனநாயகக்கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல்.

கட்சியின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்ற கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்களுடனான கூட்டத்தில் பங்குபற்றி உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சி.க.செந்திவேல் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இருபது வருடகால யுத்தத்தின் மூலமாக தென்னிலங்கையின் ஆளும்வர்க்கப் பேரினவாதக்கட்சிகள் எவ்வித படிப்பினையும் பெறவில்லை. அத்துடன், தேசிய இனப்பிரச்சினையானது நாட்டின் இன்றைய பிரதான பிரச்சினையாக எழுந்து நிற்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ள அவை மறுக்கின்றன. தமிழ்த்தேசிய இனத்தின் நியாயமான கோரிக்கைகளை, சுயநிர்ணய உரிமை அடிப்படையில், அரசியல்ரீதியாகப் பேச்சுக்கள் மூலம் தீர்வுக்குக்கொண்டுவர அவை விருப்பமின்றியும் இருந்து வருகின்றன.

அதற்குப்பதிலாக, யுத்தத்தின் மூலம் தமிழர் போராட்டத்தை அழித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் அன்னிய ஆதிக்க சக்திகளை இந்தக்கட்சிகளின் பிரதிநிதிகள் அரவணைத்தும் நிற்கின்றன. அதேவேளை, தேசிய இனப்பிரச்சினையை ஒரு கருவியாகப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிட்ட இந்தப் பேரினவாதக்கட்சிகள் கடந்தகால வழமைபோன்று தற்போதும் முயன்றும்வருகின்றனர்.

ஒரு பேரினவாதக்கட்சி தீர்வுபற்றித் தோற்றம் காட்டிப் பேசும்போது எதிர்க்கட்சியில் இருக்கும் மறுகட்சிப் பேரினவாதக்கட்சி கூச்சலிட்டு குழப்புவதில் ஈடுபடுகின்றது. அடுத்த தடவை எதிர்க்கட்சி ஆளும்தரப்புக்கு மாறியதும் மறுகட்சி எதிர்த்தரப்பிலிருந்து இனவாதக்கூச்சல்போட்டு குழப்புகிறது.

இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் இத்தகைய இழுபறி நிலைதான் தொடர்ந்து வந்திருக்கின்றது. இத்தகைய தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகளின் தவறான கண்ணோட்டமும், நிலைப்பாடும் சிங்கள மக்களால் கண்டுகொள்ளப்பட்டு நிராகரிக்கப்படாதவரை மேற்படி கட்சிகள் தமது ஆளும் வர்க்க நோக்கங்களை அன்னிய சக்திகளின் அரவணைப்புடன் செயற்படுத்தியே வருவார்கள்; சகல உழைக்கும் மக்களும் ஏமாற்றப்பட்டுக்கொண்டே இருப்பார்கள்.

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் - ஜே.வி.பியும் தமக்கிடையில் உருவாக்கிய கூட்டு சந்தர்ப்பவாத இனவாத அடிப்படை கொண்ட கூட்டாகும். நாடாளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் நோக்குடன் உருவாக்கப்பட்டுளள இக் கூட்டு தேசிய இனப்பிரச்சினை பற்றி திட்டவட்டமான - தெளிவான - கொள்கை ஒன்றை வகுத்துக்கொள்ளவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒன்றைக்கூற ஜே.வி.பி. வேறொன்றைக் கூறுகின்றது. நேர்மையான இடதுசாரிகள் இச்சந்தர்ப்பவாதக் கூட்டு முன்னணியை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதால் தேசிய இனப்பிரச்சினை உட்பட நாட்டின் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகாணமுடியாது.

நாட்டு மக்கள் விலை உயர்வுகள், கட்டண அதிகரிப்புகள், அற்ப சம்பள உயர்வு என்பவற்றால் பாதிக்கப்பட்டே வருகின்றனர். அதைப்பற்றிய அக்கறையற்ற ஆளும்வர்க்க கட்சிகள் தமக்கு ஏற்பட்டுள்ள அதிகாரப்பசிக்குத் தீனிதேடுவதற்காகவே பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த முன்னிற்கின்றனர்.

எண்பது கோடி ரூபா செலவில் ஒரு பொதுத்தேர்தலை நடத்தி முடிப்பதால் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாத நிலையே மீண்டும் தோன்றும். அவ்வாறெனில், பொதுத்தேர்தல் எதற்காக நடத்தப்படவேண்டும்? இத்தகைய தேர்தலால் மேலும் இனவாதப் பிரசாரங்கள் மேல் எழும்பவும் பிரச்சினைகள் சிக்கலடையவும் மட்டுமே வழிபிறக்கும்.

அடிப்படையில், இன்றைய அரசியல் நெருக்கடிக்கும், அதிகாரப்போட்டிக்கும் காரணமான அரசமைப்பு மாற்றப்படாதவரை அரசியல் அதிகார இழுபறிக்கும், தேர்தல்கள் மூலம் மக்கள் ஏமாற்றப்படுவதும் தொடரவே செய்யும் - என்றார் அவர். (எ)

# கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் இம்முறை ஒருநாள் மட்டுமே நடக்கும்

## நிதி, படகு பற்றாக்குறை காரணம் எனத்தெரிவிக்கப்பட்டது

கொக்குவில்,பெப்.6

கத்தோலிக்கர்களின் புனித யாத்திரைத்தலங்களில் ஒன்றான கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்திருவிழா இம்முறை ஒருநாள் மட்டுமே நடத்தப்படும்.

மேற்படி தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் தொடர்பான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் கடந்த வெள்ளியன்று மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் முடிவில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ்.பேரானந்தன், தீவகம் வடக்கு, ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் மற்றும் நெடுந்தீவுப் பங்குத்தந்தை, மாகாண சுகாதார சேவைப் பணிமனை அதிகாரிகள், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி உட்படப் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் ஆராயப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ நிதிப்பற்றாக்குறை காரணமாகவும், பக்தர்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் 'குமுதினி'ப் படகு பழுதடைந்துள்ளமையினாலும் வழமைபோல் மூன்று நாள்கள் நடத்தப்படும் உற்சவத்தை இம்முறை ஒரு நாள்மட்டும் நடத்துதல். இதன்படி அடுத்தமாதம் 30ஆம் திகதி உற்சவத்தை நடத்துதல்.

★ மேற்படி தேவாலய உற்சவத்திற்கு படகுச்சேவை நடத்த விரும்பும் படகு உரிமையாளர்கள் அடுத்தமாதம் முதலாம், 10ஆம் திகதிகளில் முறையே குறிகாட்டுவானிலும், நெடுந்தீவிலும் படகுகளைப் பதிவுசெய்து கொள்ளமுடியும். அன்றைய தினம் படகுகள் பரிசோதிக்கப்பட்டு தகுதிச்சான்றிதழ்கள் வழங்கப்படும் எனக் கூட்டத்தில் கலந்துகொண்ட கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

★ கச்சதீவுக்கு வருகைதரும் யாத்திரிகர்களின் நன்மை கருதி சகல சுகாதார வசதிகளையும் தமது பணிமனை செய்துகொடுக்குமென மாகாண சுகாதாரப் பணிமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை -

இம்முறை ஆயிரத்திற்கும் குறைவான யாத்திரிகர்களே கச்சதீவுப் பெருநாளில் பங்குகொள்வர் எனத் தாம் எதிர்பார்ப்பதாக நெடுந்தீவுப் பங்குத்தந்தை தெரிவித்தார்.

கச்சதீவுப் பெருநாளுக்கான சகல ஏற்பாடுகளும் தம்மால் செய்யப்பட்டுள்ளன என நெடுந்தீவு உதவி அரச அதிபர் கூறினார். (எ-76)

# துணுக்காய் வீதியில் 35 வீட்டுத்திட்டம் ஆரம்பம்

வன்னி, துணுக்காய் வீதியில் 11 ஆம் கட்டைக்கு அருகில் நிரந்தரக் குடியிருப்புகள் இல்லாதவர்களுக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தின்கீழ் 35 வீட்டுத்திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நடும் விழா கடந்த வாரம் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் துணை அரசியல் பொறுப்பாளர் சோ.தங்கன் இதற்கான அடிக்கல்லை வைபவ ரீதியாக நட்டு வைத்தார்.

நிகழ்வில் முல்லைத்தீவு அரசியல் துணைப் பொறுப்பாளர் முகுந்தன், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவன் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த வீட்டுத்திட்டத்தில் வறுமை நிலையில் உள்ள மாவீரர் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

**நாளை**

தை 24
சனிக்கிழமை
(07.02.2004)
திதி : பிரதமை
பகல் 3.27 வரை
நட்சத்திரம்: மகம்
பின்னிரவு 4.50 வரை
சுபநேரம்: 3.35 - 5.05
ராகுகாலம்: 9.35 -11.05
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

தனிமையில் தியானம் இருப்பது செடியைப் பாதுகாக்கும் வேலிக்கு ஒப்பானது.

# குழந்தைக்குத் தமிழில் பெயர் சூட்டியோருக்குக் கௌரவம்

சுழிபுரம்,பெப்.6

கனடா 'சிலம்பம்' அமைப்பின் தாயகக்கிளையின் ஏற்பாட்டில் மகவுக்குத் தமிழிற் பெயர் சூட்டியோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை கலாநிதி சி.சிவலிங்கராஜா, திருமதி நாச்சியார் செல்வநாயகம், பண்டிதை பொன். பாக்கியம் ஆகியோரும் -

சிறப்புரையை கவிஞர் புதுவை இரத்தினதுரையும், விளக்கவுரையை பண்டிதர் ப.இராஜகுருவும் நிகழ்த்துவர்.

மகவுக்குத் தமிழிற் பெயர் சூட்டியோருக்கு சிலம்பம் அமைப்பின் இலங்கைக்கான அமைப்பாளர் எஸ்.நடராசா மதிப்பளிப்பார்.

விழாவில் புங்குடுதீவு சர்வோதயம் அமைப்பாளர் செல்வி பொ.யமுனாதேவி விழாச்சுடரேற்றுவார். தமிழ்த்தாய் வாழ்த்தினை சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை நிகழ்த்துவார். விழா ஆரம்பத்தில் ஈகச்சுடரேற்றல் நிகழ்வு இடம்பெறும்.(எ-10-28)

### கோப்பாய் பிரதேசத்தில்

# மாணவர் கல்வி மேம்பாட்டுக்காக கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

வலி.வடக்கு,பெப்.6

கோப்பாய் பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களிலும் பின்தங்கிய கிராமங்களிலும் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக ஒரு லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பாடசாலை உபகரணங்கள், பெற்றோல்மாக்ஸ் என்பன வழங்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை, தமிழீழ மாணவர் ஒன்றியம், விடுதலைப் புலிகளின் அரசியல் துறை ஆகியன இணைந்து இப்பொருள்களை வழங்கியுள்ளன.

கோப்பாய் கிருஷ்ணன் கோவில் முகாம், யோகபுரம் உரும்பிராய் இந்துக்கல்லூரி முகாம், தொல்புரம் முகாம், இலுப்பையடி முகாம் மற்றும் அக்காச்சி குடியிருப்பு பத்தைமேனி கிராமம் ஆகியவற்றில் உள்ள பாடசாலை செல்லும் மாணவர்களுக்கே இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

மின்சாரம் வழங்கப்படாத இப்பகுதி மக்களுக்கு பெற்றோல் மாக்ஸ்கள வழங்கப்பட்டதன் மூலம் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இரவு நேரத்தில் தமது கல்வியைத் தொடரக் கூடியதாக உள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-86)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2003 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாசாலையின் மாணவர்கள்

செல்வி செ. சாருகா -134
செல்வன் க.தனுசீலன்-127

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்.

(27864) (40-14-19-26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன்

செல்வன் **அன்ரனி ஜெயம் ஹட்சன்**

அவர்கள் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2003 இல் 118 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக இன்றைய அவரது 11 ஆவது பிறந்தநாளில் அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வியறிவூட்டி, வழிகாட்டி, நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் ரியூசன் மாஸ்ரரையும் நன்றியுடன் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

380, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

- பெற்றோரும் மாமாவும்.

(28078) (14-19-26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**சிற்றம்பலம் சுப்பிரமணியம்**


அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் எங்கள் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி நிறுவனத்தின் தரத்தை உயர்த்தியுள்ளார்.

இவருடைய சமூக, சமயப் பணிகள் மேன்மேலும் வளர பருத்தித்துறை பசுபதி ஈஸ்வரனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்கள்:
வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவியும், அங்கத்தவர்களும்.

திருமதி த. பாலசுந்தரம்
தலைவி
(28092) (26-14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம்

**திரு.கணேஸ் ஸ்ரீதரன்**

(ஜே.பி.)

பூநாறிமரத்தடி, K.K.S. றோட், கமலா வைத்தியசாலை வைத்திய கலாநிதி க.ஸ்ரீதரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக 30.01.2004 இல் யாழ்ப்பாண நீதிபதி திரு. இ.த. விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். யாழ்ப்பாணம் பூநாறிமரத்தடியை வசிப்பிடமாகக் கொண்ட இவர், வைத்திய கலாநிதி திரு.திருமதி கணேஸ் - மங்கையர்க்கரசி தம்பதிகளின் புத்திரனும் வைத்திய கலாநிதி திருமதி ஸ்ரீதரன் அன்புச்செல்வியின் கணவருமாவார். சிறந்த சேவையாளராகிய இவரின் சேவைகள் மேலும் தொடரட்டுமெனப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அராலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அன்னதான சபையினரும், அராலி மக்களும்.

அராலி தெற்கு,
உடையார் ஒழுங்கை.
(28093)(34-14-26)

---

தெல்லிமாநகர் பாலர் ஞானோதய சபையின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

## நூல்நிலையத் திறப்புவிழாவும் இசைவிழாவும் பரிசளிப்பும்

இந்த வைபவம் நான்கு நாள்களுக்கு வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது.

முதலாம்நாள் நிகழ்ச்சிகள்:
06.02.2004 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு
நூல்நிலையத்தைத் திறந்துவைத்து சிறப்புரையாற்றுபவர்:
**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
விசேட ஆராதனைகளும் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும்.

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள்:
07.02.2004 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு
காசிவிநாயகர் தேவஸ்தான அறங்காவலர்
**திரு.த.பூ.முருகையாவின்** தலைமையில் விழா நடைபெறும்.
சொற்பொழிவுகளும் சிறப்புரைகளும் இடம்பெறும்.

மூன்றாம்நாள் நிகழ்ச்சிகள்:
08.02.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு
**திரு.ப.கோபாலகிருஷ்ண ஐயர்** தலைமையில் விழா நடைபெறும்.
*(பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*
விசேட சிறப்புரைகளும் இன்னிசைக் கச்சேரி, நடனம் என்பனவும் இடம்பெறும்.

09.02.2004 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு
**திருமதி மங்கையற்க்கரசி திருச்சிற்றம்பலம்** தலைமையில் விழா நடைபெறும்.
*(முன்னாள் அதிபர், யா/இராமநாதன் கல்லூரி)*
விசேட சொற்பொழிவுகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

காசிவிநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
(28096) (24-14-19-26)

சி.கணேசலிங்கக்குருக்கள்
தலைவர்.

## கட்டாக்காலி கால்நடைகளால் தொல்லை

வடமராட்சி,பெப்.6

வடமராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு கிராமங்களில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லைகளினால விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலபோக பயிர்ச்செய்கையாகப் புகையிலை, வெங்காயம் மற்றும் மரக்கறிப் பயிர்களைச் செய்கை பண்ணுவதில் இப்பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பயிர்கள் வளர்ந்துவரும் வேளையில் ஆடு, மாடுகளை வளர்ப்போர் அவற்றைக் கட்டி வளர்க்காது விட்டுள்ளனர்.

கட்டாக்காலிகளாகத் திரியும் இவை பயிர்களை மேய்வதுடன் நாசமும் செய்கின்றன. இதனால், விவசாயிகள் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். (ம-173)

## புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.6

தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சி ஒன்று இன்றும் நாளையும் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இந்தக் கண்காட்சி இடம்பெறும்.

சகல வகுப்புகளுக்குமான பாடத்திட்டங்கள், ஆசிரியர் கைந்நூல்கள் இக்கண்காட்சியில் வைக்கப்படும்.

இந்த நூல்களைப் பெறவிரும்பும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். வலயக் கல்விப பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-3)

## வகுப்பறைக் கட்டடத்துக்கு அடிக்கல்

சண்டிலிப்பாய்,பெப்.6

சுவிடிஸ் எஸ்.டி.சி. நிறுவனத்தின் நிதி உதவித்திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் புதிய வகுப்பறை மண்டபம் ஒன்று நிர்மாணிககப்படவுள்ளது.

கடந்த போர் அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த கட்டடங்கள் சில கடந்த வாரம் புல்டோசர் மூலம் இடித்து அகற்றப்பட்டுள்ளன. அந்த இடத்தில் விரைவில் புதிய வகுப்பறை மண்டபம் நிறுவுவதற்கான அடிக்கல் நடும் வைபவம் நடைபெறவுள்ளது என கல்லூரி அதிபர் திருமதி கிருபாசக்தி சிவராசா தெரிவித்தார். (ம-135)

## விசர்நாய்க்கடி தடுப்பூசி ஏற்றத் தவறியவர் மரணம்!

யாழ்ப்பாணம்,பெப்.6

விசர்நாயினால் கடியுண்ட வயோதிப மாது ஒருவர் நோய்த்தடுப்பூசியான ஏ.ஆர்.வி. மருந்தை ஏற்றத் தவறியமையால் உயிரிழந்தார்.

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த கனகராசா புவனேஸ்வரி (வயது-71) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நாய்க்கடிக்கு இலக்காகியிருந்த இவர் கடந்த முதலாம் திகதி திடீர் காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பயனளிக்காது மறுநாள் திங்கட்கிழமை உயிரிழந்தார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-7-15)

## உருக்குலைந்த நிலையில் அறிஞர் அண்ணா சிலை

கிளிநொச்சி,பெப்.6

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் குளம் - ஸ்கந்தபுரம் பிரதான வீதியில் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் (அண்ணாத்துரை) உருவச்சிலை பராமரிப்பார் இன்றி உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது. இச்சிலையின் ஒரு கையும் போரால் சேதமடைந்துள்ளது. முன்னா இங்கு செயற்பட்டு வந்த அண்ணா சனசமூக நிலையத்தினால் இச்சிலை நிறுவப்பட்டது என்று இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். ஏதாவது ஒரு நிறுவனம் இதனைப் புனரமைத்துத் தரவேண்டும் என்றும் இங்குள்ள மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ம-135)

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய

**டானியல் அரியராசா**

அவர்களின் மறைவு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமரருக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தி ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
அரசினர் வைத்தியசாலை.
கோப்பாய்.

(28076) (40-14-19-26)

## இதய அஞ்சலி



**அமரர் சின்னத்துரை நடேசலிங்கம் (காந்தி)**

சிரித்த முகத்தோடும் சிந்தித்த
பார்வையோடும் அன்புடன் பேசி
எமது ஸ்தாபனத்தின் உயர்வுக்கு
ஆலோசனைகள் பலதந்து வழிகாட்டிய
நீங்கள் மறைந்தாலும் - வானத்தில்
இருந்து வாழ்த்துவீர்கள்!

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அமரருக்கு இதய அஞ்சலி செலுத்தி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

வீடியோ கலாமினி,
அச்சுவேலி. 0777 111018

(சி-33119) (14-19-26)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 - 05 - 1930



மறைவு
28 - 01 - 2002

அமரர்

**தம்பிஐயா நாகம்மா**

(பரராசசிங்கம்)

திதி: தை பௌர்ணமி

அம்மா நீங்கள் மறைந்து ஆண்டுகள்
இரண்டு ஆனாலும்
உங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு
நீங்காது!

இணுவில் மேற்கு,
இணுவில்.
(28083) (14-19-26)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை இரத்தினசோதி**

(கோவளம் - காரைநகர்)

கோவளம், காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரான வே.இரத்தினசோதி அவர்கள் (03.02.2004) செவ்வாய்க்கிழமை நாவலப்பிட்டியில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் கருங்காலியைச் சேர்ந்த சிவசம்பு - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் திலகவதி அவர்களின் அன்புக் கணவரும் நிறைஞ்சனா, முகுந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பரஞ்சோதி, சிவசோதி, செகசோதி (ஞானசோதி), அருட்சோதி ஆகியோரின் அருமைச் சகோதரரும் தவமணி, சரஸ்வதி, தனலட்சுமி, புஸ்பராணி, சிவபாதசுந்தரம், சிவமணி, பாலேந்திரா, புஸ்பவதி, கலாதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்னபாக்கியம், ஏரம்பு, இந்திராணி, செல்வரத்தினம், ரஞ்சினி ஆகியோரின் சகலனும் நந்தகுமார், இரத்தினகுமார், இராசேந்திரன், இரவீந்திரன், பாலேந்திரன், நந்தினி, ஞானகுமார், சாந்தினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2004) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00மணிக்கு அவரின் நாவலப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை நாவலப்பிட்டி கடியன்பொலா பசார் மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

89,KADIYAN LANE,
KATHOOLA BAZAAR (Post),
KATAPOOLA.
PHONE 0542240317
(C/33131) (26-14-16)

தகவல்:
குமாரசாமி குமாரதேவன்
(மைத்துனர்)
கோவளம், காரைநகர்.

# முள்ளியான் மருந்தகத்தை புனரமைக்கக் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு,பெப்.6

முள்ளியான் அரசினர் மத்திய மருந்தகம் இயங்காததனால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. ஆகவே இதனைப் புனரமைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணியில் படையினர் தரையிறங்கும் வரை இந்த மருந்தகம் இயங்கி வந்தது.

யுத்தத்தினால் இந்த மருந்தகம் மற்றும் வைத்தியர் விடுதி ஆகியவை முற்றாக சேதமடைந்தன.

தற்போது கோவில், கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி, நித்திய வெட்டை, போகக்கறுப்பு ஆகிய இடங்களில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். ஆயினும் இந்த மருந்தகம் புனரமைக்கப்படவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் வைத்திய சேவையைப் பெறுவதில் பெரும சிரமங்களை எதிர் நோக்கவேண்டியுள்ளது. ஆகவே இந்த மருந்தகத்தைப் புனரமைத்து மருத்துவர் ஒருவரை நியமிக்கும்படி அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். (ஒ-182)

# தேர்தல் கூட்டுக் குறித்து இடதுசாரிக் கட்சிகள் பேச்சு

கொழும்பு,பெப்.6

திடீர் பொதுத் தேர்தலொன்று நடைபெறுமானால் இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக அந்தக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

ஜனநாயக இடதுசாரி முன்னணி, நவசமசமாஜக் கட்சி, புதிய இடதுசாரி முன்னணி, இலங்கை கம்யூனிட்ஸ் கட்சி என்பன கூட்டாகத் தோதலில் போட்டியிடலாம் எனத்தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாண சபைத்தேர்தலில் சுதந்திரக கட்சியும் ஜே.வி.பியும் தனித்தே போட்டியிட இருக்கின்றன. மாகாணசபைத் தேர்தலில்இணைந்து போட்டியிடுவதுபற்றி அவ்விரு கட்சிகளும் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

இலங்கை கம்யூனிஷ்ட் கட்சியின் செயலாளர் டி.யூ. குணசேகர, ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்திருக்கிறார். ஆயினும், இது குறித்து அக்கட்சியின் உயர் மட்டத்தில் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகத் தெரியவருகிறது.

## புத்தகங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் சன சமூக நிலையத்திற்கு 'போரூட்' நிறுவனம் சுமார் 14 ஆயிரம் ரூபா பெறுமதியுான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இப்புத்தகங்களில் பெரும்பாலானவை கல்விக் கற்கையுடன் சம்பந்தப்பட்டவை என்றும்,

அப்பகுதி மாணவர்களின் நலன் கருதியே இந்நூல்கள் வழங்கப்பட்டன என்றும் நிலைய நிர்வாகிகள் தெரிவித்தனர். (ஒ-15)

## உயர்தர மாணவருக்கு விசேட வகுப்புகள்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு சங்கானைக் கோட்டக் கல்விப் பணிமனையினரால் விசேட வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 10ஆம் திகதி வரையும் வாரத்தில் 3 நாள்கள் இந்த வகுபபுக்கள் நடைபெறவுள்ளன. கலை வகுப்புக்கள் வட்டுயாழ்ப்பாணக் கல்லூரியிலும், கணித வகுப்புக்கள் வட்டு இந்துக் கல்லூரியிலும், விஞ்ஞான வகுப்புக்கள் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியிலும், வர்த்தக வகுப்புக்கள சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயததிலும் நடைபெறவுள்ளன என்று சங்கானைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சி.செல்லையா அறிவித்துள்ளார்.

இந்த வகுப்புக்களில் மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்யுமாறு பாடசலை அதிபர்களை அவர் கேட்டுள்ளார். (ஒ-10)


# தெய்வீக ஸ்தலங்களில்...



சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற திருவெம்பாவை உற்சவ நிறைவு தினத்தன்று அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் மணிவாசகப்பெருமான் அடியவர் சூழப் பவனி வருகிறார். (ஒ-ரி)



மாதகல் புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழாவில் சுற்று பிரகாரப் பவனி இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம். (ஒ-95)



அநுராதபுரம் கதிரேசன் ஆலயத்திற்கு அண்மையில் வருகை தந்த அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வழிபாட்டின் பின்னர் பிரதமகுரு சிவஸ்ரீ பா.ஞானச்சந்திரக் குருக்களுடன் ஆலய வலம் வருகிறார். (ஒ-10)



ஏழாலை புளியடி ஞானவைரவர் ஆலய அன்னதான மண்டபத் திறப்பு விழாவின்போது பிரம்மஸ்ரீ ச.குகானந்தசர்மா மங்கள விளக்கேற்றுகிறார். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனும் படத்தில் உள்ளார். (ஒ-160)

# சமயக் கிரியைகள் வீணானவையா?

அவர் ஒரு வைத்திய நிபுணர். 18 ஆண்டுகள் இங்கிலாந்தில் தொழில பார்த்து, தாயகம் திரும்பியுள்ளார். வாழ்வின் நோக்கம் சம்பாதிப்பதும், சுவைப்பதும்,உறங்குவதும் மட்டுமல்ல ஏன் பிறந்தோம்? எங்கே போகப்போகிறோம் என்றும் யோசிக்க வேண்டும் எனக்கருதுபவர். தாம் பிறந்த மதத்தையேனும் நன்றாக ஆராய்ந்து வாழ்வைத் திருத்தியமைக்க விரும்புகிறார். ஓய்வு நேரங்களில் லண்டனில் ஒரு புதிய பல்கலைக்கழகத்தில் சமயக் கல்வியைத தொடர்ந்தார். அதில் பிற சமயங்களையும் ஒப்பிட்டு ஆராயும் கட்டம் வந்தது. இந்துமதத்தை சிறிய அளவில் படித்தார். ஒன்றே பரம்பொருள், உருவ வழிபாடு பிழையானது என்ற சமய மரபில் வந்தவராகையால் பொதுமக்களிடையே சமயக்குறியீடுகளை படங்களை - உருவச்சிலைகளை வழிபடுவதும், மலர் சாத்தி வழிபடுவதும், விளக்கு ஏற்றுவதும் அவருக்கு விளங்கவில்லை.

இன்னொரு வைத்தியா, '80களில ஏழாண்டுகள் லண்டனில் வசித்து விட்டு அங்கு வாழ்க்கை வயிற்றுக்கே என வெறுத்து கொழும்புக்கு மீண்டார். என்னை 'என்ன சமய சாதனை செய்கிறீர்' என்று கேட்டார். நான் ஜபம், சிறிது தியானம், ஞான சாத்திரப் பயிற்சி என்பவற்றைக் குறிப்பிட்டேன். பாவனா தியானம் - புத்த சமயத்தில் உருவமற்ற நிர்வாண சூனிய நிலையை மனதில் பாவிப்பது செய்வதுண்டோ என்று கேடடார்? நான் அருவமாக மெய்ப் பொருளைத் தியானிக்கும் மனப்பக்குவம் இன்னும் பெரிய அளவுக்கு வந்துவிடவில்லை. பெருமளவுக்கு உருவத தியானமே செய்கிறேன் என்றேன். பிரம சூத்திரம் வேண்டுமென்று கேட்டார். ஆறு மாதம் இராமகிருஷ்ண மிஷன் பதிப்பைப் படித்துவிட்டுத் திருப்பித் தந்தார்.

மற்றும் ஒரு கொழும்பு வாசி, நவீன இந்து, விவேகானந்த வாசிப்பு அவரை ஆட்கொண்டு இருக்கலாம். 'என்ன சாதனை செய்கிறீர்' என்று கேட்டார். நான் காலை மாலை நித்திய அனுஷ்டானம், பூ எடுத்து வழிபாடு, செபம், என்று முணுமுணுத்தேன். அவர் முகக்குறிப்பு இகழ்ச்சியை வெளிப்படுத்தியது. இவையெல லாம் சாதாரண மக்களிடம் அறிவு குறைந்த வர்க்கத்திடம் காணப்படும் குழந்தை விளையாட்டு என்றதொனியை உணர்ந்தேன்.

ஒரு தனிப்பொருள் மட்டுமே வழிபாட்டுக்கு உரியது என நம்பும் 'செமெதிக்' சிந்தனா மரபைத் தமக்கு ஆக்கிக்கொண்ட ஐரோப்பியர் எம்மை நான்கு நூற்றாண்டுகளாக ஆண்டு எம் கருத்தோட்டத்தை நிறுத்தி, திசைதிருப்பிவிட்டதால் நவீன இந்துக்களிடையேயும், ஒரு குற்ற உணாவுடன், கிரியைகளோடு கூடிய, வீட்டு, கோவில் வழிபாடுகளை இகழும் போக்கு பெருமளவில் காணப்படுகிறது. வேண்டாவெறுப்பாக மூத்த தலைமுறையினரின் வற்புறுத்தலுக்காகச் செய்கிறது தெரிகிறது. கிரியைகளைச் செய்து வைக்கும் குருமாரும் மதப்பற்றில்லாமல் பணஇலாபம் கருதிச் செய்வதால் வழிபடுவோரிடையில் பக்தி விசுவாசத்தை உண்டாக்க இயலவில்லை. மனம் இல்லாமல் செய்வதிலும் ஒன்றும் செய்யாமல் இருக்கும் நிரீச்சுரவாதி மேல் என்று முடிவுகட்டவேண்டிய நிலைக்கு ஆஸ்திகர்கள் தள்ளப்படுகிறார்கள்.

★ "பூவார் மலர்கொண்டு அடியாா தொழுவார், புகழ்வார் வானோர்கள்" (சம்பந்தர்).

★ "போது ஒடு நீர் சுமந்து ஏத்தி", "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன், தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" (அப்பர்).

★ சமயவாழ்வின் உச்சியை அடைந்தவர்கள் இப்படிக் கிரியா மார்க்கத்தைப் போற்றுகிறார்கள். "ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே" என்று தத்துவநூலின் சிரோரத் தினமாகிய சிவஞானபோதத்தில் மெய்கண்டர் முடிவு கட்டுகிறார். ஏதோ நாலு புத்தகத்தைப் படித்துவிட்டு மேடையேறி முழங்கி சமய சாதனை எதுவும் இன்றி உலோகாயதர்கள் போல வாழ்கிறவர்கள் தாம் சீவன் முத்தர்கள் போல் நடித்து கிரியைகளை அவமதிப்பது இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது.

## ஞானக்கதிர்

"கிரியை என மருவும் அவையாவும் ஞானம் கிளர்த்தற்கு நிமித்தம்" - விஞ்ஞான ஆய்வுகூடத்தில் செயல முறையில் மிக்க ஈடுபாடுகொண்டவரே புதிய விஞ்ஞான உண்மைகளைக காணும் அறிமுறைத் திறமையைப் பெறுவான். சரியை, கிரியை, யோகம, ஞானம் எனக் கிளிப்பாடம் சொல்லிக கொண்டு, நான் ஞானநெறியில் தான் செல்வேன், கீழ்ப்படிகளில் கால்வைக்காமலே மேலே தாவி நிற்பேன் என வாய் வீம்பு பேசுவது சாதனையாளரின் வழி அல்ல. சமய நெறியில் செல்வோர் ஒவ்வொரு படியாகக் கடந்து, உயர்ந்துசெல்ல தசாப்தங்கள் பல செல்லலாம்.

மௌன தவமுனிவர் என்று போற்றப்படும் அளவெட்டி பொ.கைலாசபதி அவர்களின் சமயவாழ்வு இதற்கு உதாரணமாகும். அவருடைய உளவியற் கட்டமைப்பின்படி முதல் 18 ஆண்டுகள் புத்திவிருத்தியில் நல்லார்வம் என்ற ஆறாம் தளத்தில் நின்றார். நாகரிகம் என்ற ஏழாம் தளத்துக்கு உயர, பத்து ஆண்டுகளும் அதிலிருந்து அடுத்த சம்ஸ்கார தளத்துக்கு உயர 12 ஆண்டுகளும் சென்றன. இக்காலங்களின் தொடக்கத்தில் அவர் கோவில் வழிபாடு செய்தார். குருபூசைகளில் பங்குபற்றினார். நாவலரின் சேவையைப் பாராட்டினார்.

சரியை என்ற சொல்லுக்கு உடன போக்கு, (திருவருளுடன் ஒத்துச்செலலுதல் - வள்ளிமுருகனுடன் போதல் போல) - என்ற பொருள் உண்டு. அதை மறந்து கோவில் கூட்டுதல், பூ எடுத்தல், தொடுத்தல், உழவாரப் பணி செய்தல் ஆகிய புறச் செயல்கள் மட்டுமே சரியை என்று கீழ் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை படிக்கிற அளவுக்கு நம்மவரின் அறிவு ஒடுங்கிவந்துவிட்டது.

தி.வி.கபாலிசாஸ்திரியார் காவிய கண்ட கணபதி முனிவர் என்ற வேதக்கல்விக் கடலின் மாணவர். ஸ்ரீ அரவிந்த ஆச்சிரமத்தில் பல்லாண்டு வாழ்ந்தவர். யோக அனுபவத்தின் மூலம் அரவிந்தரின் வேதவிளக்கங்கள் வழிநின்று இருக்குவேதத்தின் ஒரு பகுதிக்கு சித்தாஞ்ஜனா என்ற வியாக்கியானத்தை வடமொழியில் எழுதியவர். உலகெலாம் அரவிந்தரின் சிந்தனையைப் பரப்பிய எம்.பி. பண்டிற் என்பவரை உருவாக்கியவர். இந்தக் கபாலிசாஸ்திரியார் "தந்திரங்களின் மீது ஒளி", "தந்திரங்களின் பக்க ஒளி" முதலிய நூல்களில் ஆகம சாஸ்திரங்களில் வழிபாட்டு முறையின் ஆழத்தையும் செயல்முறை விளைவையும் தெளிவாகவும் முழுநம்பிக்கை உண்டாக்கும் வகையிலும் விளக்கியுள்ளார்.

உருவ வழிபாடு பற்றி அரவிந்தர் எழுதிய கருத்துக்களைத் தந்தும் கிரியை நெறியில் சென்றோர் பற்றிய தனது அனுபவங்களைக் காட்டியும் கட்டுரைகள் எழுதியுள்ளார். அரவிந்தரின் கூற்று "சமய பகுத்தறிவுவாதி கேட்கிறான் உருவமற்ற ஒரு பொருள் எப்படி உருவம் எடுக்கும்?" அண்டம் அனைத்தும் இதற்கு விடை கூறும். இந்துமதம் கல்லிலும் மரத்திலும் விலங்கிலும் மனிதனிலும் அந்தப் பொருளைக் காண்கிறது வழிபடுகிறது. மற்ற மதங்கள் தம் அறிவார்ந்த ஆன்மீகக்ர்வத்தால் அல்லது கடூரத்தால் வெறுபபதை அது (இந்துமதம்) தனக்குப் பெருமையாக தர்க்கரீதியான கடும்பிடியாக மற்றிக்கொள்கின்றது. கல்லிலும், செம்பிலும், நாற்கால் விலங்கிலும், மனிதனிலும் சமமான உள்ளிலிருந்து இயக்கும் பொருளாக இயவுளாகக் கண்டு வணங்குகின்றது."

(கடவுள், இயவுள் இரு சொற்களும் பண்டைத்தமிழ்நூல்களில் வரும் அழகிய சொற்கள்)

மிர்சியா எலியாட என்ற மேல்நாட்டு அறிஞர், அரசு (பௌத்த) வேம்பு, (இந்து) முதலிய மரங்களைச சுற்றி வழிபடுவதின் அர்த்தத்தை விளக்குகிறார்.

## ஆ.சபாரத்தினம்

மானிடவியல் அறிஞர் என்ற முறையில் உலகெங்கிலும் மதகுரு, வைததியர், சித்தர் என்ற முறையிலுள்ள SHAMALS என்று விரிவாக விளக்குகிறார். சமய பகுத்தறிவாதிகள் இறையியலையே மதங்களின விஞ்ஞானம் என்ற புதுப்பெயரால் அழைக்கிறவர்கள் அவரின் சமயம் சார்ந்த கருததுக்களை ஜுங்கின் உளவியல் சார்ந்த அடிப்படையில் எழுதியவற்றை மட்டும் ஏற்கமறுப்பர். ★

# பாராட்டி வாழ்த்துகிறோம்

## இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் (நா.உ.) அவர்களின் நிதி ஒதுக்கீட்டால் பண்டத்தரிப்பு பிரான்பற்று வளம்பெற்று அகமகிழ்கிறது.



பிரான்பற்று முருகன் ஆலய முன்மண்டபத்தில் வீடமைப்புத் திட்ட ஆரம்ப உரையனை கௌரவ அமைச்சர் தி.மகேஸ்வரன் நிகழ்த்துகையில்...

பண். பிரான்பற்றுக் கிராமம் விரைவில் பட்டின மாவதற்கான அனைத்து செயற்பாடுகளையும் முன்வைதது செயற்பட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் உறுதி மொழி வழங்கியுள்ளார்.

இதன் முதற்கட்டமாக -

★ மிகவும் கஷ்டப்பட்ட 80 குடும்பங்களுக்கு மல சலகூடம் அமைத்து வழங்கப்பட்டது.

★மிகவும் நலிவுற்ற சிறுவர்களுக்கும், பெற்றோருக்கு மான வருடாந்த உதவித் திட்டம்.

★320 வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் முதற் கட்டமாக 19 முழு வீடுகள் அமைத்து வழங்கல்.

★கடும் பாதிப்புற்ற இரு இருதயநோயாளிகளுக்கான உதவி.

★3000 சிமெந்துப் பைக்கற், 400 கூரைத் தகடுகள், 6 லட்சம் ரூபா நிதி என்பன வழங்கப்பட்டுள்ளன.

★குடிசைகள் அனைத்தும் கல்வீடுகளாக மாற்றும் பாரிய அபிவிருத்தித் திட்டம் விரைவில் முன்னெடுக்கப்பட வுள்ளது.

உ

சிவமயம்

பிரான்பற்று நாவலர் சனசமூக நிலையம் நடத்தும்

### புதுமனைத் திறப்புவிழா

இரண்டாவது உலக இந்துமாநாட்டு ஞாபகார்த்தமாக இந்து கலாசார அமைச சர் கௌரவ தியாகராசா மகேஸ்வரன் அவர்களால் பிரான்பற்றில் முதலாம் கட்டமாக நிர்மாணிக்கப்பட்ட 19 வீடுகளுக்கான திறப்புவிழா.

**காலம் : 06.02.2004**

**நேரம் : 9.00 (புதியநேரம்)**

**இடம் : பிரான்பற்று அருள்திரு முருகன் ஆனந்தசுரி மண்டபம்.**

**தலைவர்: திரு. நா.சசிக்குமார் அவர்கள்**

பிரதம விருந்தினர்

கௌரவ அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன்

அவர்கள்

(இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர்)

நாவலர் சனசமூகநிலையம்,

பிரான்பற்று.




பிரான்பற்றுக் கிராமத்தில் நலிவுற்றோருக்கான அமைச்சரின் உதவித்திட்டம்.

### சிறப்பு விருந்தினர்கள்:

திரு. து.வைத்திலிங்கம் அவர்கள்
(சிரேஷ்ட உதவிச் செயலாளர், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு, யாழ்ப்பாணம்)

திரு. பொ.தியாகராசா அவர்கள்
(கௌரவ அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளர், யாழ்ப்பாணம்)

திரு. பு.சுந்தரம்பிள்ளை அவர்கள்
(திட்டமிடற் பணிப்பாளர், மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்)

திரு. க.பவநிதன் அவர்கள்
(அரசியல்துறைப் பொறுப்பாளர், சண்டிலிப்பாய்க் கோட்டம்)

### கௌரவ விருந்தினர்கள்

திரு. ஆ.சுப்பிரமணிய சர்மா அவர்கள்
(பிரதேச செயலர், பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்)

திருமதி எ.அன்ரன் யோகநாயகம் அவர்கள்
(உதவிப் பிரதேச செயலர், பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்)

திரு. ச.செல்வராசா அவர்கள்
(நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்)

திரு. மு.பாலசிங்கம் அவர்கள்
(உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்)

திருமதி இ.உதயகுமார் அவர்கள்
(கணக்காளர், பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்)

திரு. செ.ரமேஸ் (J.P.) அவர்கள்
(உள்ளூராட்சி உதவியாளர், பிரதேசசபை - வலிகாமம் தென்மேற்கு)

திரு. ம.சிவநாதன் அவர்கள்
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்)

திரு. இ.சுகர்னை ன் அவர்கள்
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்)

திரு. வே.சிவசுந்தரம் அவர்கள்
(அதிபர், பிரான்பற்றுக் கலைமகள் வித்தியாலயம்)

திரு. ம.தயானந்தன் அவர்கள்
(கிராம சேவகர், J/147 பிரான்பற்று)

திரு. சா.ஞானானந்தன் அவர்கள்
(கிராம சேவகர், J/146 பண்டத்தரிப்பு)

திருமதி த.நகுலேஸ்வரன் அவர்கள்
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரான்பற்று)

அனைத்து அன்புள்ளங்களையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நிலைய நிர்வாகிகள்,
நாவலர் சனசமூகநிலையம்,
பிரான்பற்று.

மலர் அமைப்பு: செ.ரமேஸ் (J.P.) (சி-33130) (14)

## யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி ஆசான் உயர்திரு. சின்னப்பு பத்மநாதன் அவர்களின்

# சேவைநலன் பாராட்டும் வாழ்த்தும்

### அதிபரின் வாழ்த்துச் செய்தி

"அறிவு, அழிவு வராமற்காக்கும் கருவியாகும். அன்றியும் பகை கொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள் அரணுமாகும்" என்று சான்றோர்கள் கூறிய கூற்று இளைப்பாறிச் செல்லும் மூத்த ஆசிரியர் திரு.பத்மநாதன் அவர்களுக்குப் பொருத்தமானதாக அமை யும். குழந்தைகளோடு பழகுபவர்களுக்கு குழந்தை மனம் மிக அவசிய மானதாகும். ஆடியும், பாடியும், புன்முறுவலோடும் குழந்தையோடு குழந்தையாகச் செயற்படுபவர் ஆசிரியர் பத்மநாதன். அதேசமயம் கண்டிப்பு மிக்கவரும் அவரே. எமது ஆரம்பப் பிரிவு சோடைபோகாது மிடுக்கோடு இயங்குவதற்கு கடுமையாக உழைத்தவர். எதிர்காலத் தில் அவரது வாழ்க்கை மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கி. நடராசா,**
அதிபர்,
யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, வல்வெட்டித்துறை.

### பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

"மூதல் தலைமுறையின் ஆற்றலையும், அனுபவத்தையும் அடுத்த தலைமுறைக்கு ஏவுதளமாக அமைத்துக்கொடுப்பதில் ஆசிரியர்கள் [illegible] வகிக்கிறார்கள். உணர்வுகளுக்கேற்ப உருமாற்றிச் [illegible] உரிய சக்திமிக்க ஆசிரியர்களின் பணி வார்த்தைகளால் [illegible]யாதது. சமூகத்தின் இயங்குதளமாக, கல்வியின் ஊற்று [illegible]களின் காப்பகமாக மிளிர்கின்ற யாழ்.உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் தன் சேவையினைப் பூர்த்திசெய்து இளைப்பாறுகின்ற ஆசிரியர் திரு.சி.பத்மநாதன் அவர்களின் பணியை எண்ணும்போது நெஞ்சம் நிறைந்து நெகிழ்வடைகின்றது. காலப்பெரு வெள்ளத்தில் அவர் பணி கரைந்துவிடப்போவதில்லை. கல்லாய் இறுக எம்கல்லூரியில் சாசனமாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை.

**திரு. K.தர்மலிங்கம்,**
பிரதி அதிபர், யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.

### பல்துறை வல்லோன்

"யாஉடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.சின்னப்பு பத்மநாதன் அவர்கள் இலங்கை மண்ணில் 9 பாடசாலைகளில் கடமையாற்றி ஒரு நவரச நாயகனாக பிரதிபலித்தவர். பல கல்விக் களம் கண்ட ஒரு மூத்த ஆசிரியர் என்ற பெருமை அவரைச் சாரும். ஆரம்பக் கல்விக்கென்வே தோன்றிய தவப் புதல்வன். மாணவர்களைத் தனது பார்வையினாலேயே வழிநடத்தியவர். சக ஆசிரியர்களுடன் அன்பாகப் பழகி, அவர்களைத் தனது வச மாக்கியவர். அவர் ஓய்வுபெற்றுச் செல்வதனால் நாம் அனுபவம் மிக்க ஓர் ஆசிரியரை இழக்கின்றோம். என்றாலும் அவர், அவருடைய பணியைத் தனது இளம் ஆசிரியர்களிடம் ஒப்படைத்துச் செல்கின்றார் என்பதை நினைக்கும்போது எமக்குப் பூரிப்பை ஏற்படுத்துகிறது. இவர் ஓய்வுபெற்றுச் செல்லும் இவ்வேளை இவர் குடும்பத்துடன் நீடித்த ஆயுளுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**திரு. ஆ.விமலராஜா,**
பகுதித்தலைவர் (ஆரம்பப்பிரிவு)



திரு.சின்னப்பு பத்மநாதன் S.L.T.S. Class - I
யாழ்.உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

### வாழ்க்கை விவரம்

**கல்வி:** யாழ்.புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை
யாழ்.வதிரி திரு இருதயக் கல்லூரி, யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி

**ஆசிரிய பயிற்சி:** பொதுப் பயிற்சி (1976-1978)
யாழ்.கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

**பணிபுரிந்த பாடசாலைகள்:**

மன். பாலம்பிட்டி அ.த.க. பாடசாலை - ஆசிரியர் - 17.1.1972-14.1.74

மாத்தளை அல்அஸ்ஸார் வித்தியாலயம் -ஆசிரியர் -1.1.76-9.3.78

மா/எலமைபொத்த முஸ்லிம் வித்தியாலயம் -ஆசிரியர் - 10.3.78-30.5.78

மா/அல்வருக்கான் மகாவித்தியாலயம் - ஆசிரியர் - 31.5.78-6.2.80

வ/ கோழியகுளம் அ.த.க. பாடசாலை - ஆசிரியர் - 7.2.80-15.6.80

வ/ மாதர் பணிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை -
ஆசிரியர்- 16.6.80 - 9.6.85

வ/ கொந்தக்காரன் குளம் அ.த.க. பாடசாலை -
பதில் அதிபர் - 10.6.85 - 14.2.93

யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி-ஆசிரியர்-15.2.93-6-2-04

### மாற்றம் கோராத ஆசிரியப் பெருந்தகை

திரு.சி.பத்மநாதன் ஒரு செயற்பாடுடைய ஆரம்பக் கல்வ ஆசிரியர் என்பது வெள்ளிடைமலை. திரு.சி.பத்மநாதன் அவர்கள் பருத்தித்துறையிலிருந்து உடுப்பிட்டி வரை தனது துவிச்சக்கரவண்டியில் வந்து கற்பித்துள்ளார். இவர் ஒரு போதும் தனது வீட்டுக்கு அண்மித்த பாடசாலைக்கு மாற்றம் கோரவில்லை. தனது ஓய்வுபெறும் காலத்தையும் யாழ். உடுப்பிட்டி அ.மி.கல்லூரியுடனே கழிக்கவேண்டும் என்ற என் ணத்துடன் கல்வி கற்பித்துள்ளார். ஆரம்பக் கல்வி ஆசிரி யர்கள் பற்றாக்குறையாக உள்ள இக்காலத்தில் அனுபவமிக்க ஆசிரியரை எமது பாடசாலையும் சிறார்களும் இழக்கின்றனர் என்பது ஒரு கவலை. இருப்பினும், 60 வயதானால் ஓய்வு பெறத்தான் வேண்டும் என்ற நியதியிருக்கின்றது. அவருக்கு எல்லாம்வல்ல இறைவன் சுகத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்க எனது பிரார்த்தனைகள்.

**திரு.வே.தி.செல்வரத்தினம்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

### செயற்றிறன் மிக்க ஆசான்

எமது கல்லூரியில் ஒரு தசாப்த காலம் ஆசிரியப் பணி யாற்றி அகவை அறுபதை எய்தி இளைப்பாறிச் செல்லும் ஆசிரி யர் திரு.சி.பத்மநாதன் அவர்களின் சேவையை மீள் நோக் கும் போது எம் கண்களில் நிழலாடுவது ஆரம்பப் பிரிவு மாண வர்களுக்கான அவரது மகிழ்ச்சிகரமான கற்பித்தல் முறை மையே. இவர்களின் முன்னேற்றத்திற்காகத் தன்னை ஒரு மெழுகுவர்த்தியாகப் பிரகாசிக்கச் செய்தவர். கற்பித்தலுக் கான நுணுகி ஆராயும் திறன், எளிதான கற்பித்தல் முறைமை, அன்பாகவும் கலகலப்பாகவும் பேசும் பண்பு ஆகியவற்றை சக ஆசிரியர்களுக்கு முன்னுதாரணமாகக் காட்டி, கடமை, கண்ணி யம், கட்டுப்பாடு ஆகிய அனைத்தையும் செயற்படுத்தும் ஒரு கர்ம வீரன்.

நேர்கொண்ட பார்வை - அடக்கான பேச்சு - எளிமை யான உடை ஆகிய தன்மைகளைத் தன்னகத்தே கொண்ட ஆசான், எமது கழகத்திற்குப் பல செயற்பாடுகளை ஆற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் இவ்வேளை கழகத்தின் சார்பாகத் தொடர் தும் சகல பேறுகளும் பெற்று தனது குடும்பத்துடன் இனிதே வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**திரு.க.செபநேசன்,**
தலைவர்,
ஆசிரியர், ஊழியர் நலன்புரிக் கழகம்,
யாழ். உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,
வல்வெட்டித்துறை.

(28074) (14)

# இரண்டு வருட சமாதான காலத்தில் பொதுமக்கள் வாழ்வில் எந்த முன்னேற்றமுமில்லை

**சமாதானச் சூழ்நிலை உருவாக ஆரம்பித்து சுமார் இரண்டு ஆண்டு களாகும் நிலையிலும் மக்கள் வாழ்வில் உருப்படியான முன்னேற்றங்கள் எவை யும் மேற்கொள்ளப்படவில்லை என்கிறார் கட்டுரையாளர் சுனந்த தேசப்பிரிய. லங்காதீப வாரஇதழில் வெளியான கட்டுரையின் தமிழாக் கத்தை இங்கு தருகிறோம்.**




"ஒரு யுத்தத்தில் முதலில் காயமடைவது உண்மையே" என்றொரு முதுமொழி வழக்கிலுள்ளது. இதுபற்றி ஆழ்ந்து சிந்தித்தால் யுத்தத்தால் சமாதானத்தை இழக்க நேர்கிறதேயன்றி வேறு எவ்வித பயனும் கிட்டுவதில்லை என்பதை உணர முடியும். ஆனால், நமது நாட்டில் இதற்கு எதிர்மாறான விதத்திலேயே நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக யுத்தம் நிறுத்தப்பட்ட நிலையில் நாட்டில் சமாதானச் சூழல் நிலவுகின்றது. நேர்மையுடன் நோக்குவதாயின் கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து ஆகிய பொது மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய துறைகளில் அபிவிருத்தி ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இன்று எமது நாட்டில் அவ்வித முன்னேற்றங்கள் ஏதாவது நியாயமான அளவாவது எட்டப்பட்டுள்ளதா? என்பதே நம் முன் எழுந்துள்ள கேள்வியாகும்.

இன்று நமது நாட்டில் இடம்பெறும் நிகழ்வுகளைக் கூர்ந்து கவனிக்குமிடத்து அரசுக்கு எதிராகப் பொது மக்கள் முன்னின்று நடத்தும் ஆர்ப்பாட்ட நிகழ்வுகளையே அதிகமாகக் காணமுடிகிறது. கடந்த இரண்டாண்டு காலமாக நிலவும் சமாதான சூழ்நிலையில் தமது வாழ்க்கை நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஒரு சிறு தரப்பினரே நம்புகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் சமூக மட்டத்தில் உயர்நிலையில் உள்ளவர்களாவர்.

நாட்டில் சமாதானச்சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதென்னவோ உண்மைதான். ஆனால், இதனால், பொது மக்களது வாழ்க்கையில் பெரிய அளவிலான முன்னேற்றமெதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## கல்வித்துறை

உண்மையில் பொருளாதார அபிவிருத்தியில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளதாகக் கூற இயலாது. அது மட்டுமன்ற திருப்திகரமான நிர்வாக நடைமுறைகள் மூலம் பொது மக்களுக்கு வழங்கத்தக்க சேவைகளை அவர்களுக்கு வழங்கக் கூட அரசு அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. இதற்கானதொரு முக்கிய உதாரணமாக கல்வித் துறையைச் சுட்டிக்காட்ட இயலும். கடந்த வாரம் கொழும்புப் பத்திரிகையொன்று கூட்டிக்காட்டிய விதத்தில் ஆறாம் ஆண்டில் அனுமதிபெறும் மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள் விடயத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை காரணமாக உருவாகியுள்ள சிக்கல் நிர்வாகத்திறன் வீழ்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கடந்த அரசு காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கற்பித்தல் நடைமுறை முற்று முழுதாகத் தோல்வியடையக்கூடிய நிலை உருவாகியுள்ளது. பாடசாலைகளின் நூல் நிலைய வசதிகளை அபிவிருத்தி செய்வதை அரசு முற்று முழுதாகக் கைவிட்டுள்ளதாகத் தெரிகிறது. கணனிக் கல்வியை அபிவிருத்தி செய்யும் திட்டமும் சிறுகுழந்தையின் மழலைக் கதை போன்று அர்த்தமற்றதொன்றாகிவிட்டது.

அது மட்டுமன்றி, கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில மொழி மூலக் கல்வித் திட்டத்தைப் பயனளிக்கும் வகையிலான நிர்வாக நடைமுறையின் கீழ் செயற்படுத்துவதற்கு அரசு அக்கறை செலுத்தத் தவறியுள்ளது. அம்மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஆங்கிலப் பாட நூல் இதுவரையில் வழங்கப்படாதது மட்டுமன்றி, அவ்வகுப்புக்களில் சிங்கள மொழி மூலப்புத்தகங்களை உபயோகித்தே ஆங்கில பாடங்கள் நடத்தப்படுகின்றன.

## அக்கறையின்மை

ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இம் மாணவர்கள் ஆங்கிலபாடம் கற்பதற்கு வேண்டிய வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டியது முக்கியமான தேவையாகக் கருதப்பட வேண்டும். ஆனால், கடும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நமது அரசில் தலைவர்கள் நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் அறிவு வளர்ச்சியில் எதுவித அக்கறையும் செலுத்துவதாகத் தோன்றவில்லை.

இதேபோன்று உயர் கல்வி நிறுவனமான பல்கலைக்கழகக் கல்வி நடைமுறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்த ஆகக் குறைந்தது மகாநாடு மட்டத்திலாவது பேச்சுக்கள் மூலம் ஆராய்ந்து பார்ப்பதற்குக் கடந்த காலங்களில் எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தோன்றவில்லை.

நாட்டின் மத்திய மற்றும் மாகாண மட்ட அரசியலில் கல்வி அமைச்சர்களாகப் பலர் பதவி வகித்து வரும் நிலையிலும், மாணவர்களுக்கான உரிமைகள் எவையும் முறைப்படி அவர்களுக்குக் கிட்டுவதில்லை. கடந்த இரண்டாண்டு கால இடைவெளியில் கல்வித்துறை வளர்ச்சிக்காகத் தம்மால் மேற்கொள்ளப்பட்ட சாதகமான மாற்றங்களென ஒன்றையேனும் இக்கல்வி அமைச்சர்களால் குறிப்பிட்டுக் காட்டமுடியுமா?

அதேவேளை இந்த அமைச்சர்களது பிள்ளைகள் வெளிநாட்டில் கல்வி கற்கின்றனரா அல்லது கொழும்பின் சர்வதேச பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனரா? என்பது குறித்து அறிந்து கொள்வதற்குப் பொதுமக்கள் அக்கறை எடுக்க வேண்டியுள்ளது.

## கூச்சலால் பயனில்லை

"சமாதானம், சமாதானம்" என்று மட்டும் அரசு கூச்சலிடுவதால் பயனேதும்கிட்டப்போவதில்லை. பொது மக்களது நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்கும் இவ்வகையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் உறுதியான - தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு முன்வரவேண்டியது அவசிய தேவையாகும். அவ்வாறு அரசு இவ்விடயத்தில் அசமந்தப் போக்கைக் கைக்கொள்ளுமானால், இப்பிரச்சினைகள் சமாதானச் சூழலுக்கு எதிரான வகையில் தோற்றமுற்று வளர வாய்ப்பாகிவிடும்.

பொது மக்களது வாழ்க்கையுடன் நேரடியாகத் தொடர்புடைய போக்குவரத்துத் துறையில் காணப்படும் பாதிப்புகள் மற்றும் பின்னடைவுகள் குறித்து கடந்த இரண்டாண்டு காலப் பகுதியில் இந்த அரசு மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் என எதனையும் சுட்டிக்காட்ட முடியவில்லை. பொதுமக்களின் அத்தியாவசிய போக்குவரத்து சேவையான புகையிரத சேவையை அபிவிருத்தி செய்வதற்கு அரசு இம்மியளவு அக்கறை கூட எடுத்துக் கொண்டதாகக் கூறமுடியவில்லை. அதற்குப் பதிலாக புகையிரதத் திணைக்களத்தை ஓர் அதிகார சபையாக மாற்றியமைத்ததன் மூலம் ஊழியர்களின் உரிமைகளைக் குறைத்துவிடும் நடவடிக்கையை மேற்கொண்டது. பொது மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு செயற்படவேண்டிய அரசொன்று இவ்விதம் பொதுமக்களுக்குச் சிரமங்களை உருவாக்குவது நியாயமானதல்ல.

## வேலைநிறுத்தம்

புகையிரதத் திணைக்கள ஊழியர்களது வேலை நிறுத்தப் போராட்டத்துக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அரசு காட்டிவரும் அசமந்தப் போக்கை அவதானிக்கும் போது போக்குவரத்துச் சேவை தொடர்பாக மட்டுமன்றி, அச்சேவையைச் சேர்ந்த ஊழியர்கள் தொடர்பாகவும் அரசு எவ்வித அக்கறையுமற்ற போக்கில் செயற்படுவதாகத் தோன்றுகிறது. நாட்டின் பொது மக்கள் இன்று எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினையான வடக்கு - கிழக்கு யுத்தத்துக்குத் தீர்வுகாண்பதற்கு உற்சாகம் காட்டி வரும் அரசு, நாட்டில் பொது மக்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் குறித்துத் தீர்வு காண்பதற்கோ, அல்லது நியாயமான நிர்வாக முறையை அறிமுகம் செய்யவோ வெட்கப்படுவது போன்று செயற்படுவது கவலையளிக்கும் விடயமாகும்.

அரச பஸ் போக்குவரத்துச் சேவையை தனியார் மயப்படுத்தும் முயற்சியில் தடைகளைச் சந்தித்தும், அத்தடைகளினின்றும் விலகி வெளியேற முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அவ்விதம் போக்குவரத்து நிறுவனத்தை விலைக்குவாங்க முன்வந்திருக்கும் நிறுவனம் அதனை தொடர்ந்த நடத்துவதற்குரிய தகுதி படைத்ததல்லவென விமர்சகர்கள் பலமுறை சுட்டிக்காட்டியிருந்த போதிலும் அதனைக் கணக்கிலெடுக்காத அரசுக்கு உண்மைநிலை புரிய நீண்டகாலம் எடுத்துள்ளது.

அரசின் சீரற்ற நடைமுறையே சுகாதார சேவை ஊழியர்களின் அரசுக்கெதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது. அவர்களது கோரிக்கைகளுக்கான நிவாரணம் 2006ஆம் ஆண்டில் வழங்கப்படுமென அரசு கூறுகிறது. மேலே கூறப்பட்ட விதத்தில் கல்வித்துறை மற்றும் போக்குவரத்துத்துறை தொடர்பாக அரசு கடைப்பிடிக்கும் அலட்சியப் போக்கையே இச்சுகாதாரத்துறை ஊழியர்கள் தொடர்பான பிரச்சினைகளிலும் அரசு கடைபிடிப்பதாகத் தோன்றுகிறது.

## மருத்துவத்துறை

கடந்த காலங்களில் ஆகக் குறைந்து கடந்த இருபது ஆண்டு கால இடைவெளியில் வைத்திய சேவையில் எவ்வித முன்னேற்றங்களும் இடம்பெறவில்லை. ஒருவேளை நாட்டின் வைத்தியத் துறையில் அதிக அளவில் வேலை நிறுத்தங்கள் கடந்த இரு ஆண்டு கால இடைவெளியிலேயே இடம்பெற்றுள்ளதாகக் கூடக் கருத வேண்டியுள்ளது.

சுகாதாரத்துறையில் மாதமொன்றுக்கு மூவாயிரத்து நானூறு ரூபா மட்டுமே ஊதியமாகப்பெறும் ஆண், பெண் அடங்கலான ஊழியர்கள் சேவையாற்றுவது புதுமையானதொன்றாயினும் அது உண்மையானதொன்றே, சம்பள உயர்வு கோரி அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது நியாயமற்றதென எவராவது கூறஇயலுமா?

பொது மக்களது நாளாந்த வாழ்க்கைக் குப் பாதிப்பை ஏற்படுத் தத்தக்க மேற்குறிப்பிட்ட வகையான அத்தயா வசிய சேவைகள் அடிக் கடி தடைப்படுவதற்கு அரசு இடமளிப்பதால் உண்மையில் கடு மையாகப் பாதிப்படைவது சாதாரண பொது மக்களேயன்றி அரசியல்வாதிகளோ அல்லது உயர்மட்ட அதிகாரிகளோ அல்லர். அரச தரப்பைச் சேர்ந்தவரானாலும் சரி, எதிர்க்கட்சி யைச் சேர்ந்தவரானாலும் சரி, அவர் ஒரு நாடாளுமன்ற உறுப் பினராக இருப்பாரேயானால் அது அவருக்கு ஒரு கௌரவமிக்கதும், பொருளாதார ரீதியில் லாபகரமானதுமான தொழிலெனக்கருதப் படும் நிலை நாட்டில் நிலவுகின்றது. மிக அண்மைக்காலத்தில் வெளிவந்த செய்தியாக, மக்கள் வங்கிக்கு சொந்தமான லண் டன் நகரத்திலுள்ள கட்டடமொன்றை அவ்வேளையின் சந்தைப் பெறுமதியிலும் பார்க்க முன்னூறு கோடி ரூபர் குறைவான விலைக்கு விற்பனை செய்யப்பட்டமை தெரியவந்துள்ளது. அவ் விதம் அக்கட்டடத்தை குறைந்த விலையில் கொள்வனவு செய்த நபர் ஆறுவார காலத்துள் அதனை வாங்கிய விலையைவிட 300 கோடி ரூபா அதிகரித்து வேறொருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

## லஞ்சம் மற்றும் ஊழல்

இந்த விதமாக கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகள் குறித்தும் விவரிப்பதில் எவ்வித பயனும் விளையப்போவதில்லை. நாளொன்றின் 24 மணி நேரமும் கூ.மொ.விற்பனை நிலையங்களை வியாபார நடவடிக்கைகளுக்காகத் திறந்து வைப்பதற்கு எடுக்கபட்ட முயற்சிகள் கைகூடாதுபோனமைபற்றி பலர் எடுத்துக்காட்டியபோதிலும் அதனை ஏற்றுக்கொள்வதற்கு அரசு முன்வரவில்லை. கொழும்பு நகரை நவீனப்படுத்தி இரவு பகல் என்னேரத்திலும் தூங்காத நகரமாக மாற்றியமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கூட வெற்றியளிக்கத் தவறிவிட்டன.

இவ்விதம் நடவடிக்கைகள் எதுவும் சாதகமான பலனளிக்கத் தவறிய நிலையில் லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான ஆணைக் குழுவை முறைப்படி இயங்க வைக்கத் தவறிவிட்டதாகத் தற்போது அரசின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குற்றச்சாட்டு எவ்விதம் அமைந்தபோதிலும், குறிப்பிட்ட லஞ்ச ஊழல் ஆணைக்குழு முறைப்படி இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது குறித்து அரசின் நிலைப்பாடு என்னவெனத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

அவ்விதம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவை இயங்கவைக்க முடியுமானால் அதனை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அரசின் பொறுப்பாகும். விசேடமாக தற்போதைய அரசின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் 14 அமைச்சர்கள் மீதான லஞ்சஊழல் குற்றச்சாட்டுக்கள் விசாரணை செய்யப்பட வேண்டிய நிலையிலிருக்கும் இத்தருணத்தில் இவ்வித குற்றச்சாட்டுகள் பயங்கரமானவையாகும். சமாதானம் நாட்டுக்கு அவசிமான தேவைதான்; அது இன்று நாட்டின் முதலாவது அதிமுக்கிய விடயமாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய விடயம் எனக் கருதப்படவேண்டியுள்ளது. ஆனால், சுற்றிச்சுற்றி இது பற்றியே பேசிக்கொண்டு பொது மக்களது ஏனைய பிரச்சினைகள் குறித்து கவனமெடுக்கத் தவறுவது யுத்தம் என்பதைப் போன்றதொரு குற்றமேயாகும். மற்றொருபுறம் சமாதானம் குறித்த விசுவாசத்தை பொது மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதன் மூலம் அந்த உரிமைகளை அவர்களுக்கு வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசிமாகும்.

எந்தவொரு அரசியல் கட்சியான போதிலும் கூடி மேற்குறிப்பிட்ட நடவடிக்கைளில் விசுவாசத்துடன் ஈடுபடமுடியாவிட்டால் இன்று நம் நாட்டின் அரசியல் நிலைவரத்தின்படி மேற்கொண்டு சுபீட்சமான எதிர்கால எதிர்ப்பார்ப்புடன் பயணத்தை மேற்கொள்வது இயலாத காரியமாகும்.



விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் குடாநாட்டின் பல பகுதியிலும் சமகால அரசியல் சூழ்நிலையை விளக்கும் தெரு கூத்து நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர்.

மாதகல் பகுதியில் அண்மையில் நடந்த தெரு கூத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள். (படம்: மாதகல் செய்தியாளர்)

## உளமார்ந்த நன்றிகள்

எம்மால் தவறவிடப்பட்ட தங்கக் கைச் சங்கிலியைக் கண்டெடுத்து மனிதாபிமானமுறையில் எம்மிடமே ஒப்படைத்த சாவகச்சேரி மட்டுவில், தெற்கு, மருதங்குளம் வீதியைச் சேர்ந்த திரு.ந.கனகரத்தினம் என்பவருக்கு எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

*நுணாவில் மத்தி,* - சண்முகம் குடும்பத்தினர்.
*சாவகச்சேரி.* (28072) (32-12-38)

## கண்ணீர் அஞ்சலி

உள்ளூராட்சித் திணைக்களத்தின்
முன்னாள் ஆய்வு உத்தியோகத்தரும்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளருமாகிய

### பரநிருபசிங்கம் பரம்சோதி

அவர்களது மறைவுகுறித்து அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
*கொடிகாமம்.* (C/33113)(34-12-38-32) சாவகச்சேரி பிரதேச சபை.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.க.இராசதுரை
அவர்களின் அன்புத் தந்தையார்

### கதிர்காமர் இராசையா

(குடியிருப்பு, மந்துவில்)
அவர்கள் காலமானதையிட்டு
எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
*புத்தூர்.* (28067)(34-12-38-32) ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 17 | | 06 |
| 06 | | 02 |
| 1977 | | 1998 |



### அமரர் சண்முகநாதன் சந்திரகாசன்
### (கப்டன் இராவணன்)

தாயகம் மீட்கக் களமாடி
நாயகனே மாவீரன் ஆகிவிட்டாய்!
தாயகம் விடிகின்ற வேளையிலே
ஐயாவுன் நினைவில் நீந்துகின்றோம்
தூயவனே உனக்கெம் அஞ்சலிகள்!

நினைவில் வாடும்:
*மதவடி லேன்,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.* (28010)(34-12-38-32) - குடும்பத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 | | 06 |
| 08 | | 02 |
| 1978 | | 1998 |



### ஜீவரட்ணம் ஜெயகுமார்
### (மேஜர் குமரன்)

ஆறு ஆண்டுகள் சென்றாலும் ஆறாது
எம்துயர். என்றும் உனது
நினைவுகளுடன் உன்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(28069)(32-12-38)

*174,கஸ்தூரியார் வீதி,* உமது பிரிவால் வாடும்:
*யாழ்ப்பாணம்.*
சொந்த முகவரி: குடும்பத்தினர்.
*வளலாய், அச்சுவேலி.*

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.6

புண்ணிய நாச்சியம்மையாரின் குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ். சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படும் பண்ணிசைப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் சுமார் 215 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வன்னிப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இம்முறை பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றுகின்றனர் என்றும் -

போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும் புண்ணிய நாச்சியம்மையாரின் குருபூசை தினத்தன்று வழங்கப்படும் என்றும்-

யாழ்.சைவபரிபாலன சபையின் தலைவரும், சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப் புலவர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.6

அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் அனுசரணையுடன், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையினால் இவ்வாண்டு நடத்தப்படவுள்ள கணணிப்பயிற்சிக்கு பயிற்சியாளர்களைத் தேர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிமுதல் உதவி அரசஅதிபர்பணிமனையில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கான அழைப்பிதழ் கடிதங்கள் கிடைக்கப்பெற்றவர்கள் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்க வேண்டுமென உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் அறிவித்துள்ளார். (எ)

## பண்டத்தரிப்பில் இலவசக் கல்வி நிறுவனம்

யாழ்ப்பாணம்,பெப்.6

பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் கிறிஸ்தவ மேம்பாட்டுச்சபை தமது பங்கு மக்களின் நலன் கருதி மாணவர்களுக்கான இலவசக் கல்வி நிறுவனமொன்றை ஆரம்பித்துள்ளது.

புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி நிறுவனத்தில் ஆரம்ப வகுப்பு முதல் ஜி.சீ.ஈ சாதாரண தரம் வரையிலான மாணவர்களுக்கு சகல பாடங்களிலும் கல்வி கற்பிக்கப்படுகிறது.

பங்குத் தந்தை ம.பெ.ஞானரட்ணம் இக்கல்வி நிலையத்தை நிர்வகித்து வருகிறார்.

இக்கல்வி நிலையத்தில் வெகு விரைவில் கணனிப் பயிற்சி வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று நிர்வாக இயக்குநர் தெரிவித்தார். (ஒ-15)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.6

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.(ஒ-10)

## நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

வடமராட்சி கிழக்கு,பெப்.6

மருதங்கேணிப் பிரதேசத்தில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் தற்போது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் 'மலேரியா' நோய் மீண்டும் பரவும் அபாயம் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது. (ஒ-182)

## தவறிவிட்டது

அச்சுவேலி தெற்கு, தோப்பைச் சேர்ந்த சிவலிங்கம் தர்மநாதன் என்பவருடைய தேசிய ஆள் அடையாள அட்டை (800722926V), விசேட அடையாள அட்டை (0907012238), சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியன ஞாயிற்றுக்கிழமை (01.02.2004) அரியாலைக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையே கைதவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

யாழ் சம்பந்தன் கிளினிக்.
அச்சுவேலி சிற்றூர்திச் சேவைச்சங்க அலுவலகம். யாழ் பஸ்நிலையம்.
சிற்றூர்தி நேரக் கணிப்பாளர்.
சி.தர்மநாதன்
அச்சுவேலி. தோப்பு. (சி-3 ....)

## ஓராண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 24 | | 18 |
| 12 | | 01 |
| 1946 | | 2003 |



### அமரர் கந்தசாமி வேல்சாமி பாலன்

திதி: பூரணை 06.02.2004

அன்பின் இருப்பிடமே, பாசத்தின் உறைவிடமே!
என்றும் எமக்காக உழைத்தவரே!
நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்று ஆயிடினும்
உம் நினைவலைகள் எம்மைவிட்டு நீங்காது.


வடக்கு றோட்,
மிருசுவில், கொட்டிகை. (28014)(34-12-38-32) - குடும்பத்தினர்.

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண அழைப்பும்

எமது குடும்பத் தலைவர்

### செல்லையா முத்தையா

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)



அவர்கள் 11.01.2004 இல் சிவபதமடைந்தார். அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (06.02.2004) வெள்ளிக்கிழமை முற்பகலில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நிகழ்கின்ற மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் நாளை (07.02.2004) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம முதல்வர் தவத்திரு. கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் தலைமையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் சகலரையும் கலந்துகொள்ளுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

"சிவநிதி",
சண்முகானந்த வீதி,
கல்வயல்,. சாவகச்சேரி. (27902)(34-12-38-32) - குடும்பத்தினர்.

## பணிநிலை வெற்றிடம்
### ஆயப்பகுதி

ஆயப் பகுதியில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன

**01. அலுவலர்** [ஆண்கள்]

தகைமைகள்:
க.பொ.த (உயர்தர) இல் பொருத்தமான பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**02. ஆய உதவியாளர்** [ஆண்கள்]

தகைமைகள்:
க.பொ.த (சாதாரண) இல் தமிழ்,கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**03. அலுவலக உதவியாளர்** [ஆண்கள்]

தகைமைகள்:
ஆண்டு 10 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**04. பாதுகாவலர்**

தகைமைகள்:
ஆண்டு 9 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
உடல் வலுவும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும்
- ஊழியர் நயநிதி வசதி உண்டு

**நேர்முகத்தேர்வு**

இடம்:
ஆயப்பகுதி,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி

காலம்:
2004.02. 10ஆம்,11 ஆம் நாள்
காலை 11 மணி

பொருத்தமான வேண்டுகையாளர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தன்வரலாறு (சுயவிபரம்), சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

02.02.2004

ஆயம், நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்

# அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண சகல கட்சிகளும் ஐக்கியப்படவேண்டும்

சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியானது. அதன் இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகிறது.

எல்.ரீ.ரீ.ஈ. என்னைப் படுகொலை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்ட மூன்று நாள்களின் பின்னர் நான் இந்த வேண்டுகோளை விடுத்தேன். 2000ஆம் ஆண்டில் நிகழ்வுற்ற தேசிய சுதந்திரதின வைபவத்திலும் இதே வேண்டுகோளை விடுத்தேன்.

2002ஆம் ஆண்டில் சுதந்திர தினம் அண்மித்தபோது எமக்குப் பரீச்சயம் இல்லாத அரசியல் கலாசாரம் ஒன்றினுள் நாம் பிரவேசிக்க வேண்டியதாக இருந்தது. பரவலான வேறுப்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ள பல்வேறு அரசியல் சக்திகளுக்கிடையே அரசியல் நல்லிணக்கத்தினால் இந்த நாட்டை ஆளவேண்டிய சகாப்தமாக அது இருந்தது. ஜனாதிபதி பதவியினூடாகவும், மந்திரி சபையினூடாகவும் இந்த நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஓர் அரசாங்கத்தினுள் கொண்டுவரப்பட்டன. 2002 சுதந்திர தினத்தன்று வேறுபட்ட அரசியல் கலாசாரமொன்றைத் தோற்றுவிப்பதற்கு உகந்த பொன்னான வாய்ப்பு இதுவென்று நான் அறிவித்தேன். இனப்பிரச்சினைக்கு - நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்துக்கு எம்மை எதிர்நோக்கியிருந்த பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு உகந்த பொன்னான வாய்ப்பு இதுவென்று நான் விசேடமாகக் குறிப்பிட்டேன்.


2003ஆம் ஆண்டில 55ஆவது சுதந்திரதின வைபவத்திலும் இதே கருப்பொருளினை நான் மீண்டும் வலியுறுத்தினேன்.

அன்றைய நாளிலிருந்து இந்தக் கொண்டாட்டம் வரையிலான கடந்த ஓராண்டு காலத்தில் சமாதான நடைமுறை, ஜனநாயகம், நல்ல நிர்வாகம், பொருளாதார சுபீட்சம் என்பவை சம்பந்தமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கொள்கைகளை நான் கவனமாக அவதானித்து வருகிறேன்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் 2003-11-04 ஆந்திகதி அரசாங்கத்தின் மூன்று அமைச்சுக்களை நான் பொறுப்பேற்றேன். அந்த ஓராண்டு காலத்தில் நிகழ்வுற்ற சம்பவங்கள் எமது மக்கள் அனைவரதும் மனங்களில் கடுமையான சந்தேகங்களை உருவாக்கியிருந்ததும் நாட்டின் பாதுகாப்புக் குறித்து அதிக அக்கறை கொண்டிருந்ததுமே இதற்கான காரணங்கள் ஆகும்.

எனது அரசியல் வாழ்க்கை முழுவதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று பேச்சு மூலமாகவே தீர்க்கப்பட வேண்டுமென்ற கருத்தினை நான் கொண்டிருக்கின்றேன். இக்காலப்பகுதி முழுவதிலும் ஒரு சிறிதளவேனும் இந்நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்று நான் நம்புகிறேன்.

இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான வழிமுறைகளை நலிவடையச் செய்வதற்காக எமது நிலைப்பாடு எந்த வகையிலும் பங்களிப்புச் செய்யும் என்று நான் நினைக்கவில்லை. கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி இந்த விடயம் குறித்து நான் பின்பற்றிய கொள்கைக்கு இணங்க மேலும் அடியெடுத்து வைத்தபோது என்ன நிகழ்ந்தது. இது எந்தவகையிலும் அரசியல் அதிகாரப்போராட்டத்தையோ அல்லது அரசியல் யாப்பு நெருக்கடியையோ சுட்டிக்காட்டவில்லை. இது ஒரு புறத்தில் நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் மறுபுறத்தில் பிரதான அரசியல் சக்திகளை ஐக்கியப்படுத்தி விவாதங்களினூடாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றினைக் காண்பதற்கான மார்க்கத்தில் மேலும் பயன்தக்க முறையில் அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்காக எடுத்து வைக்கப்பட்ட ஓர் அடியேயாகும்.



மீண்டும் 2003 நவம்பர் மாதத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றினைக் காண்பதற்காக பிரதமரும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடவேண்டும் என்ற கோரிக்கையினை நான் மீண்டும் நாட்டின் முன் வைத்தேன். இந்தத் தேவைப்பாட்டிற்காகப் பரவலான செயற்றிட்டமொன்றினையும் நான் பரிந்துரைத்தேன்.

பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்காகவும, ஜனநாயகத்தையும் நல்லாட்சியினையும் நிலைபெறச் செய்வதற்காகவும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புடன் தெளிவான செயற்றிட்டமொன்றினை நாம் அமுல்படுத்த வேண்டுமென்று நான் பரிந்துரை செய்தேன். ஆனால் இந்த வலுவான பிரேரணைக்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பை இதுவரை பெறமுடியவில்லை என்பதனை வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன்.

நாட்டின் கடுமையான அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு சகல அரசியல் சக்திகளும் ஐக்கியப்படல் வேண்டும் என்ற தொலைநோக்கில் இன்னும் நான் உறுதிகொண்டுள்ளேன். அந்தக் குறிக்கோளை நோக்கி நான் தொடர்ந்து செயலாற்றி வருகிறேன். இத்தேவைப்பாட்டின் பொருட்டு பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் கூட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கான பணி இதுவரைகாலமும் தோல்வியுற்றபோதிலும் இந்த நோக்கத்துடன் பல்வேறு ஏனைய அரசியல் சக்திகளுடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இணைந்துகொள்வது சாத்தியமாகி உள்ளது. இத்தேவைப்பாட்டுக்காக தேசியக் கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கு நாங்கள் எடுத்துவைத்த முதலாவது அடியே இதுவாகும்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நாங்கள் முதலில் அதிகாரத்தை ஏற்றபொழுது எமது ஆட்சியின் தொலைநோக்கு ஜனநாயகத்தை மீளநிலை நிறுத்தல், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், இனம், மதம், அரசியல் நம்பிக்கைகள் என்பவற்றைக் கருத்தில் கொள்ளாமல் ஒவ்வொரு பிரச்சினையினதும் சுகாதாரத்தையும் உரிமைகளையும் உறுதிப்படுத்தல் என்பவற்றின் மீது தளம் கொண்டிருந்தது.

பொதுத்துறையில் நிலவிய இரட்டைப் பிரச்சினைகளான ஊழல், திறமையீனம் என்பவற்றை எதிர்கொள்வதன் ஊடாக நல்லாட்சிக்கான கொள்கைகளையும் செயற்றிட்டங்களையும் இத்தொலைநோக்கு உள்ளடக்கியிருக்கிறது.

தற்போதிருக்கும் தேர்தல் முறையினை சீர்திருத்துவது மிகவும் அவசியமானது. இது பாரிய முரண்பாடுகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. ஆணைக்குழுக்களைவலுப்படுத்த வேண்டிய தேவைப்பாடும் எமக்கு உள்ளது. லஞ்சக் குற்றச்சாட்டுக்களை அல்லது ஊழல் தொழிற்பாடுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவொன்றினையும் அமைக்கவேண்டியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக நீடித்திருந்த யுத்தநிறுத்த ஏற்பாடுகளை நாடு வரவேற்கிறது. இருந்தபோதிலும், யுத்தம் இல்லாதிருப்பது சமாதானம் அல்ல என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாது. அறிவுடனும், நேர்மையுடனும் நாட்டுக்கான கடப்பாட்டுடனும் நாங்கள் முன்னேறிச் செல்லவேண்டும். நிலையான சமாதானத்தினை அடைவதற்காக சொந்த நலன்கள், கட்சி நலன்கள் அனைத்தையும் நாங்கள் புறத்தே தள்ளிவைக்க வேண்டும்.

தொடர்ச்சியான யுத்தநிறுத்தம் ஒன்றின் ஊடாக சமாதானத்தினை நோக்கி எல்.ரீ.ரீ.ஈ. மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளும் காட்டிவரும் கடப்பாட்டினை நாங்கள் உறுதியாக வரவேற்கிறோம். அரசியல் முரண்பாட்டுக்கு யுத்தமும், ஆயுத மோதல்களுமே தீர்வு என்பதை தெற்கிலுள்ள சகல அரசியல் சக்திகளும் இப்பொழுது நிராகரித்துள்ளதனையும் பேச்சுவார்த்தைகள், உரையாடல்கள், இணக்கப்பாடுகள் என்பவற்றின் பாதையில் செல்வதற்கு விருப்பம் கொண்டுள்ளமையையும் நாங்கள் பெரிதும் வரவேற்கின்றோம்.



இலங்கையின் 56 ஆவது சுதந்திரதின நிகழ்வுகளில்...

அரைநூற்றாண்டு காலத்துக்கு மேலாக எம்மை முடமாக்கி வைத்திருக்கும் பிரச்சினையொன்றுக்குத் தீவு காண்பதற்காக, ஒரு கொள்கைக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் இணக்கப்பாடு கண்டிருப்பது இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின் நாம் முன்னொருபோதுமே கண்டிராத ஒரு புலப்பாடாக உள்ளது. இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தில் ஆக்கபூர்வமான விளைவுகளை நாம் அறுவடைசெய்ய வேண்டுமேயானால், குறுகிய மற்றும் சொந்த நலன்களை நாம் புறத்தே ஒதுக்கி வைக்கவேண்டும்.

கட்சி வேறுபாடுகளையும், சொந்த விருப்பு வெறுப்புக்களையும் புறமொதுக்கி, எமது குறிக்கோள்களை அடைவதற்கு ஒன்றிணையுமாறு இந்த நாட்டில் உள்ள நேர்மையான தலைவர்கள் அனைவரையும் குழுக்களையும் பிரதான அரசியல் சக்திகள் அனைத்தையும் எமது வாழ்க்கையில் இந்த முக்கியமான, பரிசுத்தமான தினத்தில் நான் மீண்டும் ஒருமுறை அழைப்பு விடுக்கின்றேன்.

இந்த 56 ஆவது சுதந்திரதின வைபவத்தில் இந்த உன்னத இலக்குகளையும் தேசியக் குறிக்கோள்களையும் அடைவதில் கைகோர்க்க வருமாறு உங்கள் அனைவருக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

மும்மணிகளின் ஆசி உங்கள் அனைவருக்கும் கிடைப்பதாக! வணக்கம். அஸ்லாமு அலைக்கும்!

*

## ஒரு கறுப்புக் கொடியை அறுத்ததற்காக

# கறுப்பு உடையுடன் 100 வயோதிபர்கள் எம்.பியின் இல்லம் எதிரே கூடி எதிர்ப்பு!

திருக்கோவில்,பெப்.6

அம்பாறை மாவட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேருவின் இல்லத்திற்கு முன்னால் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடி அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் அறுக்கப்பட்டது. இதையடுத்து, திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த 100 வயோதிபர்கள் கறுப்பு உடையணிந்து எம்.பியின் இல்லம் எதிரே சென்று, சுதந்திர தினத்துக்கான தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

திருக்கோவில் பகுதியில் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்கும் பொருட்டு பறக்கவிடப்பட்டிருந்த கறுப்புக் கொடிகளை திருக்கோவில் அதிரடிப்படையினர் அறுத்து எறிந்ததால் நிலைமை பதற்றம் அடைந்தது.

இது தொடர்பாக திருக்கோவில் பகுதிக்கான விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் விஸ்வநாதன் அதிரடிப்படையின் பொறுப்பாளரைச் சந்தித்து வினவினார். தமது உயர் அதிகாரிகள் இப்பகுதிக்கு வர இருப்பதால் முகாமை ஒட்டிய 200 மீற்றர் சுற்று வட்டத்தில் உள்ள கொடிகளையே தாம் அகற்றியதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதிரடிப்படையினரால் கொடிகள் அகற்றப்பட்டபோதும், மக்கள் தொடர்ந்தும் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டிருந்தனர்.

# இலங்கை விவகாரம் குறித்து அகாஷி – ஆர்மிடேஜ் பேச்சு

கொழும்பு,பெப்.6

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் குறித்தும் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமைகள் குறித்தும் ஜப்பானின் விசேட சமாதான பிரதிநிதி யசூஷி அகாஷி அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலர் ரிச்சட் ஆர்மிடேஜ்"டன் விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.

ஜப்பானிலுள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் கடந்த செவ்வாயன்று இச்சந்திப்பு இடம்பெற்றது.

எதிர்வரும் 17ஆம் திகதி வாஷிங்ரனில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இணைத் தலைமை தாங்கும் நாடுகளின் கூட்டம் தொடாபாகவும் இச்சந்திப்பின்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இதேவேளை -

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை காரணமாக சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறித்தும் இவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்றப் பணிகளைக் கருத்திற்கொண்டு சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தரப்பினர் விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட்டு மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பார்கள் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# சு.க.மத்திய செயற்குழுக் கூட்டத்தில் திடீர் பொதுத்தேர்தலுக்குக் கோரிக்கை

கொழும்பு,பெப்.6

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

ஜே.வி.பியுடன் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதால் தேர்தலில் இலகுவான வெற்றிகிடைக்கும் எனவும் மத்திய செயற்குழு ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

சு.க.மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை மாலை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

நாட்டின் அரசியல் நிலைமைகள் குறித்து ஆராயப்பட்ட இக்கூட்டத்தில், பொதுத் தேர்தல் நடத்துவது குறித்தே முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இன்றைய நிலையில் பொதுத் தேர்தல் நடத்தப்படுவது முக்கியமானதாகும் என்று பெரும்பாலான மத்திய செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் கூறியுள்ளனர்.

நாட்டில் 80 வீதமான மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர் என்று ஒரு மதிப்பீடு தெரிவித்திருப்பது குறித்தும் அவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

# விண்ணப்பித்த தினத்திலேயே அ.அட்டை வழங்கும் நடைமுறை

கொழும்பு யாவத்தையில் இயங்கும் ஆள்பதிவுத் திணைக்களம், அவசரமாக அடையாள அட்டை தேவைப்படுபவர்களுக்கு ஒரே நாளில் தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அடையாள அட்டைகளை உடனடியாக வழங்க மேலதிகக் கட்டணமாக ஐந்நூறு ரூபா அறவிடப்படுகின்றது.

கடவுச்சீட்டு பெறுபவர்களும் தொலைந்துபோன மற்றும் பழுதடைந்த அடையாள அட்டைகளுக்குரியவர்களும் உரிய விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி, பிறப்புச்சான்றிதழ், புகைப்படப் பிரதிகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் மற்றும் அதிகாரிகளால் உறுதிப்படுத்தி நேரடியாக அங்கு சமர்பிக்கவேண்டும்.

ஆவணங்களின் நம்பகத்தன்மை தொடர்பான விசாரணைகளின் பின் ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்கு அன்றையதினமே அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. சேதமடைந்த அடையாள அட்டைகளைச் சமர்ப்பிப்பது இந்த நடைமுறையின்போது கட்டாயமானதாகும். (ஓ-88)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மோட்டோறோலா தொலைபேசி, சோலர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0602212970. (28086)

### மரம்அரியும் வாள் விற்பனைக்கு

7' நீளம் உடைய வாள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: வே.பத்மநாதன், நவாலி தெற்கு, மானிப்பாய். (28087)

### வாடகைக்கு

யாழ். போதனா வைத்தியசாலையை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. மருத்துவ மாணவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: விள. இல.2159, மே/பா,உதயன். (28095)

### கோழிக்குஞ்சு விநியோகம்

90% (வீதம்) முட்டை இடக்கூடிய கைலைன் பேட்டுக்குஞ்சுகள் இன்று பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: N. ஸ்ரீகாந்தன், 704, கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப்புளியடி. யாழ்ப்பாணம். T.P.: 2223270. (28068)

## கொழும்புத்துறை வீதிகளில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டன

கொழும்புத்துறை,பெப்.6

கொழும்புத்துறைப் பகுதி வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை வீதி, ஆனந்தன் வடலி வீதி, புங்கன்குளம் வீதி என்பவற்றிற்கே மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, கொழும்புத்துறையில் மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு துரிதகதியில் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-30)


### பெயின்ரிங் வேலை

வீடுகளுக்கு பெயின்ற் அடித்தல், வயறிங், பிளமிங் வேலைகள் மற்றும் மின் உபகரணங்கள் திருத்துவதற்கு எம்மிடம் தொடர்புகொள்ளவும்:

**TOPLAND WINDING**
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(விநாயகர் கோவில் முன் மேல்மாடி)
(28103)


## கட்டாக்காலி நாய்களால் தொல்லை!

குருநகர் பகுதியில் கட்டாக்காலிகளாக வீதியோரங்களில் திரியும் நாய்களால் பொதுமக்கள் மிகுந்த உயிராபத்தை அனுபவித்து வருகின்றனர்.

கட்டாக்காலி நாய்கள் தொடர்பாக யாழ். மாநகரசபையின் நாய்பிடிக்கும் பிரிவினர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குருநகர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-51)



### வேகம் விவேகம் அல்ல!

சாரதி பயிற்சியளிப்பதில் 25 வருட அனுபவம் பெற்றவர்களிடம்
குறைந்த செலவில் ! குறுகிய காலத்தில்!! சிறந்த முறையில்!!!
பயிற்சி பெற்று சாரதி லைசென்ஸ்சை பெற்றுக் கொள்ளுங்கள்
பயிற்சியாளர்: குட்டி, (கொட்டடி/சங்கானை)
தொடர்பு: S.V. குணபாலன்
239, பிரதானவீதி, யாழ்ப்பாணம்,
தொ.பேசி: 2225844


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 22 - 03 - 1933

மறைவு 07 - 01 - 2004



**அமரர் சுப்பிரமணியம் குமாரசாமி**

இதயத்தில் தீயாய் எரிந்திருக்கும் உம்
இழப்பை மறந்திடுமா எம் நெஞ்சம்?
அருவி நீர் சொரியும் விழிகளுடன்
உழலுகிறோம் ஊமைகளாய் இன்று!
ஆயிரம் உறவுகள் வந்தாலும் – உங்கள்
அறிவு புகட்டும் பாசத்திற்கு
ஈடாகுமா? அப்பா.........!

இன்று (06.02.2004) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும், கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நாச்சிமார் கோவில் வீதி.*
*நவாலி வடக்கு. மானிப்பாய்.*
(28104)(34-14-12)

**மனைவி, பிள்ளைகள்,**
**மைத்துனர்: கணநாதன், பத்மநாதன்.**

## அறிவித்தல்

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு யாழ். இந்து மகளிர் மண்டபத்தில் நடைபெறும் என்பதனை பங்குதாரர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அவர்களின் வருகையையும் எதிர்பார்க்கிறோம்.**

**டாக்டர் வே.யோகநாதன்**
முன்னாள் தலைவர்
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
கூட்ட அழைப்பாளர்.
(சி33133)(37-14-12-34)

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா குமாரசுவாமி

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும சிவன்கோவில் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா குமாரசுவாமி (ஓய்வுபெற்ற முன்னாள் எழுதுவினைஞர் - திறைசேரி, யாழ். கூட்டுறவு ஆணையாளர் அலுவலகம்) அவர்கள் 02.02.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எஸ்டேட் சுப்பரின்டன் சி.முத்தையா - திருமதி முத்தையா ஆகியோரின் அன்பு மகனும் இந்துக் கல்லூரி ஒழுங்கை பண்டத்தரிப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் வீ.சின்னத்துரை - திருமதி சின்னத்துரை ஆகியோரின் மருமகனும் இளைப்பாறிய ஆசிரியை திருமதி கு.புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் சிவரஞ்சனி (தே.வீ.அ.அ.சபை, யாழ்ப்பாணம்), சிவகுமாரன் (தொழில்நுட்பக் கல்லூரி/வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபானந்தன், பொன்மதி (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவயோகம், ராஜநாயகி, சிவஞானம் (முன்னாள் நன்னடத்தை அதிகாரி) மற்றும் செல்வராசா (ஓய்வுபெற்ற கூட்டுறவு பரிசோதகர்), பரமேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.02.2004 செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, கோம்பையன் மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

*இல.16/ 14, இரண்டாம் ஒழுங்கை,*
*சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி.*
(28101)(34-14-12)

### சுப்பையா சதாசிவம்.

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும கொண்ட சுப்பையா சதாசிவம் 02.02.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - பார்வதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - இராசம்மாவின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் உருத்திரசிங்கம் (நெதர்லாந்து), வன்னியசிங்கன் (பிரதம எழுதுநர், யாழ். மாவட்ட நீதிமன்றம்), அமிர்தலிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீபாத தேசிய கல்வியியற்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதி (நெதர்லாந்து), மதியழகி, பாலசுசிலேன்மணி (ஆசிரியை, கொட்டக்கலை த.ம.வி.) ஆகியோரின் மாமனாரும் நெதர்லாந்தில் வசிக்கும் கீசன், சாந்தீபன், ஜெகதீபன், அனுசன், நிரோஜா மற்றும் நிறைஞ்சன் (எழுதுநர், நீதவான் நீதிமன்றம், பருத்தித்துறை), நிறைஞ்ஜனி, நிதர்சன் (யாழ்.இந்துக் கல்லூரி), நிரோஜன் (கொ.இ.கல்லூரி), அமிர்தகாந (ஹற்றன் ஹைலன்ஸ் ம.ம.வி.), அரங்கன் (கொட்டக்கலை த.ம.வி.), அஜந்தன் (கொட்டக்கலை த.ம.வி.) ஆகியோரின் அன்புப் பேரனும் சண்முகம், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, கந்தசாமி, பாக்கியம், சாந்தலிங்கம் மற்றும் தர்மலிங்கம் (கனடா), கதிரவேலு (முறிகண்டிச்சாமியார்), இராசலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நல்லையா, ஏகாம்பரம, சண்முகராசா (தவம்), காலஞ்சென்ற கெங்காதேவி மற்றும் சரஸ்வதி, நடேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.02.2004 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு அவரது கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

பொற்பதி வீதி, செருக்கன்புலம் ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(28097)(34-12-14)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 1932 - 03 - 07

உதிர்வு 2004 - 01 - 07



**அமரர் செல்லம்மா முத்துக்குமாரு**

ஆறவில்லை எம் மனது மாதம் ஒன்றானதே
தேறவில்லை எம் மனது தேற்றுகிறோம்
தேடுகிறோம் நாம் கிடைக்கவில்லை அம்மா
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு – ஆனால்
அம்மா என்ற சொல்லிற்கு யாருமில்லை.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (2004. 02. 06) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது அன்புத்தாயின் மறைவுச்செய்தி கேட்டு எங்களிற்கு சகல விதத்திலும் உதவியவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி, தொலைநகல் மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் யாழ்.போதனா வைத்தியசாலை 3 ஆம் இலக்க விடுதி மருத்துவர், தாதிமாருக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.
(28109) (26-34-12-14)

தகவல்:
**முத்துக்குமாரு குடும்பம்**
தொலைபேசி 0777 242833.

# போராளிகளின் செலவுகளைக் கட்டுப்படுத்தி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளத் திட்டம்

## யாழ். - நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் தெரிவிப்பு

வலி.வடக்கு,பெப்.6

போராளிகளுக்கான பல செலவுகளும் இந்த ஆண்டு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எமது அமைப்பின் மூலம் பல அபிவிருத்திச் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்காகவே இந்த நிதிக்கட்டுப்பாடு செயற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ வரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம் க.சிவராசா தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பொ.ஈஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:-

போரினால் மக்கள் பல்வேறு துன்ப, துயரங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். அவர்களை இனங்கண்டு உதவ வேண்டியது எமது கடமையாகும். இன்று பல இடங்களில் இருக்கும் கட்டடங்களை உடைத்துவிட்டுப் புதிய கட்டடங்களை அமைத்து வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் வரவேற்கத்தக்க ஒன்றல்ல. உண்மையில் பாதிக்கப்பட்ட நிலையங்களுக்கு உதவிகள் கிடைக்க வேண்டும் - என்றார்.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சூ.சிறில் உரையாற்றும்போது:-

2004ஆம் ஆண்டில் எந்தவொரு நிகழ்வாக இருந்தாலும் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பிக்கவேண்டும். மககள் அந்த நேரத்துக்கு வரவேணடும். அதிக எண்ணிக்கையானவர்கள் இல்லையென்று காலம் தாழ்த்தி நிகழ்வுகளை ஆரம்பிக்கக் கூடாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது குறிப்பிட்டார்.

ஜப்பான் நாட்டிற்குச் சென்றிருந்த போது 10.00 மணிக்குக் கூடவேண்டிய அந்நாட்டின் நாடாளுமன்றம் 10.02 இற்குக் கூடியதனால் பொருளாதார அபிவிருத்தி பாதிப்படைந்துவிட்டதாகக் கூறி, அந்நாட்டுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தமிழ்ச்செல்வன் கூறினார்.

இந்நாட்டின் அரசியல் சூழ்நிலை நாளுக்குநாள் மாறிக்கொண்டே செல்கின்றது. அந்தநிலைக்கு முகங்கொடுப்பதற்கு எந்தவகையிலும் எம்மை நாம் தயார்படுத்திக்கொள்ளவேண்டும்.

வாசிக்கும் பழக்கத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவேண்டும். அழிந்து போன மற்றும் சேதமடைந்த சனசமூக நிலையங்கள், நூலகங்களை மீளக்கட்டியெழுப்பவேண்டியது அவசியமாகும். எம்மிடம் உள்ள வளங்களை இனங்கண்டு அதனைப் பயன்படுத்திப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிசமைக்க வேண்டும் - எனவும் வேண்டிக்கொண்டார்.

(ம-86)


**ஆசிரியர் சேவைப் போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

ஆசிரியர் : T.திருமுருகன்
பொன். சத்துரு

ஆரம்பம்: 07.02.2004 10 மணி சனி, ஞாயிறு (S.L.T.)

நியூட்டன் - ஆரியகுளம் சந்தி - யாழ். நகர்.

வழிகாட்டிநூல்: விற்பனையாகின்றது - 70/-

வெளியீடு: திகழ் பதிப்பகம். K.K.S. வீதி, இணுவில்.

(24-12-14-32) (28119)


**இந்து வித்தியாவிருத்திச் சங்கம்**
**புலமைப் பரிசில்**

01-02-2004 இல் இதே பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் எங்களின் விலாசம் சரியாகத் தரப்படவில்லை. தயைகூர்ந்து சகல விண்ணப்பங்களையும் "சரஸ்வதி மண்டபம் - 75, லோரன்ஸ் வீதி, கொழும்பு - 4" என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

செயலாளர்,
இ.வி.ச.

(சி-33136)(19-12-14-32)

**2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**
**செல்வன் J.ஆருயன்**
06-02-2004




தொண்டமானாற்றை பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திரு.திருமதி ஜெயபாலச்சந்திரன் - ஞானச்செல்வி தம்பதியினரின் செல்வப் புதல்வன் J.ஆருயன் தனது 2ஆவது பிறந்ததினத்தை இன்று (06.02.2004) தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை லண்டனிலுள்ள அன்பு அப்பா, உடுப்பிட்டியில் உள்ள அம்மா செல்வி, நோர்வேயிலுள்ள பெரியப்பா, பெரியம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆருக்குட்டியை இறைவன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

சனசமூக நிலைய வீதி,
உடுப்பிட்டி.
(28114)(35-12-14-32) - ராஜி அன்ரா.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



2003ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 127 புள்ளிகளைப் பெற்ற எமது அருமை மகள்

**செல்வி சுபாகரன் கீர்த்தனா**

அவர்களுக்குக் கல்வியூட்டிய யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலய அதிபர், ஆசிரியர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் பெருமையடைகின்றோம்.

5ஆம் வட்டாரம், வேலணை (28105)
(4ஆம் வட்டாரம்,நெடுந்தீவு). (19-12-14-32)
திரு.திருமதி சுபாகரன் குடும்பத்தினர்.


**தேவை**

★ கணக்காளர்
★ விற்பனையாளர்

ஜமுனா ஸ்ரோர்ஸ்
தம்ரோ தளபாட நிலையம்
நெல்லியடி.

T.Phone: 021-2263970
0777-730 332

(சி-33135)(32-12-14)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது கிராமத்தைச் சேர்ந்த பின்வரும் மாணவர்கள் 2003ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையைப் பாராட்டியும் இவர்களது கல்வி வளர்ச்சி மேன்மேலும் சிறக்க வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

சிவபாலன் கோபிநாத் - யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை – 147 புள்ளிகள்
சரவணபவன் சுகிர்தன் - யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை – 140 புள்ளிகள்
பத்மாதரன் சயந்தாபன் - கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி – 135 புள்ளிகள்
ஸ்ரீரஞ்சன் சிந்துஜா - யாழ்ப்பாணக் கல்லூரி. வட்டுக்கோட்டை – 135 புள்ளிகள்
புண்ணியராசா திவாகரன் - யாழ்ப்பாணக் கல்லூரி. வட்டுக்கோட்டை – 127 புள்ளிகள்
கங்காதரன் சுவர்ணன் - யாழ்ப்பாணக் கல்லூரி. வட்டுக்கோட்டை – 122 புள்ளிகள்

வாழ்த்துவோர்:
கற்பகச்சோலை நன்மை விருத்திச் சங்கம்.
கற்பகச்சோலை இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகம்.
கற்பகச்சோலை சனசமூக நிலையம். கற்பகச்சோலை மாதர் அபிவிருத்திச்சங்கம்.
கற்பகச்சோலை கிராம அபிவிருத்திச் சங்கம்.

(28115)(24-12-14-32) வட்டுக்கோட்டை வடக்கு.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



பொன்னுத்துரை சிவானந்தன்



மயில்வாகனம் நந்தீஸ்வரன்

எங்கள் ஆலயப் பொருளாளரும், நல்லூர் வடக்கு கலைமகள் சனசமூக நிலையத் தலைவருமாகிய திரு.பொன்னுத்துரை சிவானந்தன அவர்களும், எங்கள் ஆலயத் தலைவரும், இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க உபசெயலாளருமாகிய திரு.மயில்வாகனம் நந்தீஸ்வரன் அவர்களும் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக 09.01.2004 அன்று யாழ். மேலதிக நீதிவான் திருமதி S.நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளமையையிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர்கள் சேவை மேன்மேலும் தொடரவும் உயர்வுபெறவும் அம்பாளின் அனுக்கிரகம் என்றும் கிடைக்கவேண்டும் என்று அம்பாளை வேண்டுகின்றோம்.

ஸ்ரீ மதுரை மகா முத்துமாரி அம்பாள்
ஆலய பரிபாலன சபை, இருபாலை, வேளாதோப்பு.

(28113) (24-12-14-32)


**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**







உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2355145 இருந்து
2367457 வரை
சீட்டிழுப்பு இல. 1476
திகதி 04.02.2004

**வெற்றி எண்கள்** 10 11 39 49 55

போனஸ் எண் 57

**ஜக்பொட் பரிசு**
**ரூபா.2,298,800/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,298,800/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 | 75 | 10,000/- | 750,000/- |
| 3 | 3,846 | 500/- | 1,923,000/- |
| 2 | 63,399 | 20/- | 1,267,980/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 10ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 77,732 | 10/- | 777,320/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.4,918,300/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.2,900,100/-**

தொடர் இல. 3324791க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2004 பெப்ரவரி 07ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2355657-7-87
2358506-6-52
2366471-7-88
2362727-7-21
2365523-1-71

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

உ

## சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி
## அருள்மிகு ஸ்ரீ விஸ்ணு துர்க்கா ஆலய புனராவர்த்தன
## பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கும்பாபிஷேகம்:- 08.02.2004 ஞாயிறு பகல் 12.00மணி
எண்ணெய்க்காப்பு:- நாளை (07.02.2004) சனிக்கிழமை காலை 8.00மணி தொடக்கம் 3.00மணிவரை.
பிரதமகுரு:- தியாக. கெங்காதரக்குருக்கள் - புன்னாலைக்கட்டுவன
ஆலயகுரு:- சிவத்திரு. இரத்தின பரமேஸ்வரஜயா
அடியார்கள் கலந்து அருள் பெறுக!

கா.நடராசா,
பரிபாலனசபைப் பொறுப்பாளர்.
(28125) (26-14)

---

## விஞ்ஞானபீடம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## அறிவித்தல்

விஞ்ஞானபீடத்திற்கு அனுமதிபெற்றுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கு 2003/2004 ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விச் செயற்பாடுகள் முன்னர் அறிவித்தவண்ணம் 09.02.2004 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக மாட்டாது.

இம்மாணவர்களுக்கான கல்விச்செயற்பாடுகள் 23.02.2004 ஆம் திகதி திங்கட்கிழமையே ஆரம்பமாகும்.

23.02.2004 ஆம் திகதிக்குப் பின்னர் பதிவுகளை மேற்கொள்ளும் புதிய மாணவர்கள் எவரும் 2003/2004 ஆம் கல்வியாண்டில் கல்வியை ஆரம்பிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். காலதாமதமாகப் பதிவுசெய்பவர்கள் மற்றும் குறைநிரப்பு பட்டியல் மூலம் அனுமதிக்கப்படுபவர்கள் இடமிருப்பின் 2004/2005 ஆம் கல்வியாண்டில் கற்க அனுமதிப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

- பதிவாளர். (28123)(34-14-26)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பிரதி அதிபர்
திருமதி சர்வேஸ்வரி ஸ்ரீகாந்தன அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி சோதிப்பிள்ளை அருணாசலம்

அவர்கள் கடந்த 04.02.2004 அன்று சிவபதமடைந்ததையிட்டு அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.
சண்டிலிப்பாய். (28124) (26-14)
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பா.அ.சங்கம், பழைய மா.சங்கம்.

---

## கண்ணீர் அஞ்சலி

கிங்ஸ்ரன் எலக்ரோனிக்ஸ் (Kingston Electronics) உரிமையாளர்
C.K.ரமேஸ் அவர்களின் மைத்துனர்

### கிறிஸ்ரி ஜேக்கப்

அவர்கள் 01.02.2004 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானதையிட்டு மிகுந்த துயரடைவதோடு பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்கான திருப்பலி குருநகர் புதுமை மாதா தேவாலயத்தில் காலை 6.15 மணிக்கு நடைபெறும்.

கிங்ஸ்ரன் எலக்ரோனிக்ஸ் ஊழியர்கள்.
(28117) (37-14-26)

---

## 31ஆம் நாள் நினைவுடன்....

"நெஞ்சம் மறப்பதில்லை
நெஞ்சமதில் நினைத்திருப்போம்"

ஆண்டவன் படைப்பில் 08 - 05 - 1934



ஆண்டவன் அழைப்பில் 08 - 01 - 2004

### அமரர் சுவாம்பிள்ளை மைக்கேல்பிள்ளை

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், சுகாதார நீர் விநியோகப்பகுதி)

அசையாது உங்கள் நினைவுகள்
ஆறாது எங்கள் உள்ளம்
அடங்கவில்லை உங்கள் பாசம்
அமைதியாகவில்லை உங்கள் உறவுகள்
அளவிட முடியாத துக்கம்
ஆறாத கவலை
எத்தனை யுகங்கள் உருண்டாலும் அடக்கி விடாது
உங்கள் நினைவுகளை!

எமது குடும்பத் தலைவர் அமரர் சு.மைக்கேல்பிள்ளை அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வாக நாளை (07-02-2004) சனிக்கிழமை காலை கரவெட்டி மரியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அத்திருப்பலி நிகழ்வில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்கவும். தொடர்ந்து நாளை நண்பகல் எமது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனநிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் இந்த அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டி அன்புடன் அழைக்கின்றோம்.

அமரரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

கரவெட்டி வடக்கு,
கரவெட்டி. (28106) (19-14-26)

---

## விடாமுயற்சியும், தொடர்பயிற்சியும் மாணவர்களுக்கு வெற்றியைத் தரும்

வட்டுக்கோட்டை,பெப்.6

மாணவர்களது விடாமுயற்சியும் தொடர்பயிற்சியும் மாணவர்களை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்லும்.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர் கவியன்பன்.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி அதிபர் ந.சபாரெட்ணசிங்கி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளம் வளம்பெற வேண்டுமானால் உடல்வளம் பெறவேண்டும். உடல்வளம் பெறுவதற்கு விளையாட்டு அவசியமானது. மாணவர்கள் வெற்றி பெறவில்லையென்று கவலையடையக்கூடாது. தொடர்ந்தும் பயிற்சி பெறுகின்றபோது நிச்சயம் வெற்றி பெறமுடியும். எமது போராளிகளின் விடாமுயற்சியும் தொடர் பயிற்சியுமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குக் காரணம்.

இதேபோன்று, இன்று வெற்றி பெற்ற மாணவர்கள் கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்ட, மாகாண மட்டங்களுக்குச் சென்று எமது தேசத்திற்கு பெருமை தேடித் தரவேண்டும். அதற்கு விடாமுயற் சியும், தொடர் பயிற்சியும் அவசிய மானது - என்றார். (எ-161)

### வல்லையில் விபத்து; பஸ் சேதம்!

வடமராட்சி,பெப்.6

வல்லை நாற்சந்தியில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ பஸ்வண்டி ஒன்றும், லொறி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகின.

நேற்று முற்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தில் பஸ்வண்டியின் முற்பகுதி சேதம் அடைந்தது. (எ-173)

### தபால்பெட்டி சேதம்

குருநகர்,பெப்.6

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் அமைந்துள்ள தபால் பெட்டி உடைந்து தபால்களைச் சேர்ப்பிக்க முடியாத நிலையில் காணப்படுகிறது.

குருநகர் வீதியோரங்களில் அமைந்துள்ள தபால்பெட்டிகள் பாவிக்கப்படாத நிலையில் உள்ளமையால், இப்பகுதி மக்கள் மேற்படி தபால்பெட்டியையே பயன்படுத்தி வந்தனர் என்றும் -

தபால் பெட்டி சேதமடைந்ததை அடுத்து தபால்களைச் சேர்ப்பிப்பதற்கு இப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர் என்றும் - கூறப்பட்டது. (எ-51)

---

### பிரத்தியேக வகுப்புகள்

தரம் 9, 10, 11இற்கான கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானமும் தொழிலநுட்பமும், வரலா.சமூகக்கல்வியும் வகுப்புகள் நடைபெறுகின்றன.

★ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
★ மாணவர் தொகை மட்டுப்படுத்தப்பட்டது
★O/L பரீட்சையினை மையப்படுத்திய கற்பித்தல் நடை பெறும்.

தொடர்பு:- 166, நாவலர் வீதி (கஸ்தூரியார் வீதிச் சந்தி - பிறவுன் வீதிச் சந்தி இடையில்)
(28121)(37)

---

### ஆசிரியர் போட்டிப் பரீட்சை மாதிரி வினாத்தாள் வகுப்பு

ஆசிரியர்: தவசேகர்
ஆரம்பம்: 07.02.04 (2.00-4.00)
★ஒவ்வொரு சனிக்கிழமையும் 2.00-4.00 மணி வரை நடைபெறும்.

டானியல் ஞாபகார்த்த கல்வி நிலையம்
(28118)

---

### தந்துதவவும்

யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி வீதியூடாக பயணஞ்செய்த இ.போ.ச. பஸ்ஸில் ஆடைகள் அடங்கிய ஒரு கைப்பையை பெண்மணி ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு மீளப்பெறாமல் இறங்கிவிட்டேன்.

பையை வாங்கிய பெண்மணி தயவுசெய்து S.நடராசா, EY 2745, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (28120)

---

### பெறுபேறு வெளியானது

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.சைவபரிபாலன சபையினரால் கடந்த நவம்பர் மாதம் நடத்தப்பட்ட சைவநெறித்தேர்வின் பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று சபையின் பரீட்சைச் செயலாளா சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

---

## உடன் தேவை

ஓவ்செற் மெஷின் மைன்டர் உடன் தேவை.
(OffSet Machine Minder)
கலர் பிறின்டிங் வேலைகளில் 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
கொழும்பில் தங்குமிட வசதி வழங்கப்படும்.
சம்பளம் ரூபா 10,000/= இற்கு மேல் வழங்கப்படும்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
விளம்பர இல: 2160,
C/o உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C33138)(34-14-26)

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்.குணசீலன்
(இம்ரான் பாண்டியன் படையணி)
(சிவசுப்பிரமணியம் - ரமேஸ்)
தாயின் மடியில் 1979.04.26
தாயக மீட்பில் 1998.02.06



### சி.சோதிமலர்
(சுசி)
(சிவசுப்பிரமணியம் - சோதிமலர்)
தாயின் மடியில் 1971.12.27
இறைவனின் பாதக் கமலங்களில் 1998.01.09

எங்கள் அன்புச் செல்வங்களே!
அன்னை மடியில் மலர்ந்து~ஓர்
உயிரும் ஈருடலமாகப் பாசப்பிணைப்புடன்
வளர்ந்து எங்கள் எல்லோரையும்~ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு ஒரு மாதத்திற்குள் இறைவனின்
பாதக்கமலங்களைச் சென்றடைந்த ~ எங்கள்
அன்புச் செல்வங்களே! ஆறு ஆண்டுகள் என்ன
இப் பிறவியில் உங்களின் பிரிவினால் -
ஏற்பட்ட துயரில் இருந்து மீளமாட்டோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கும்:

அப்பா, அம்மா
சகோதரர்கள், சகோதரி,
அண்ணி, பெரியப்பா, பெரியம்மா,
அண்ணா - அண்ணி உறவினர்கள்
(உடுப்பிட்டி).

தற்போதைய முகவரி:
ஆசாரி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(28112)(37-14-26)

---

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் சதாசிவம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல ஆயுர்வேத வைத்தியர் வைத்திலிங்கம் சதாசிவம் (பொன்னுத்துரை) நேற்று (05.02.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - தங்கம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் இளைப்பாறிய ஆசிரியை திருமதி பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் சுந்தரவல்லி(பிரான்ஸ்), அமிர்தவல்லி(இளைப்பாறிய ஆசிரியை), பரமானந்தவல்லி ஆகியோரின் தந்தையாரும் பற்குணதாஸ்(பிரான்ஸ்), அமரர் சதானந்தஜோதி மற்றும் மகேந்திரன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் செல்லையா (வைத்திய கலாநிதி), அழகரத்தினம், அன்னம்மா, புவனேந்திரன், விஜயசிங்கம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அகிலா, அபிரா (பிரான்ஸ்), துசியந்தி, கேமச்சந்திரன், சபேஸ்குமார், கவிதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச் வீதி, உடுவில்,
சுன்னாகம். (28129)(36-11-16-18)
தகவல்: மனைவி,பிள்ளைகள.

### திருமதி திரவியம் இரத்தினம்

கோண்டாவில், குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரவியம் இரத்தினம் அவர்கள் 04.02.2004 புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு - அன்னப்பிள்ளை தம்பதியின் மகளும் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் பரமலிங்கம், காலஞ்சென்ற இராசேஸ்வரி மற்றும் கணேசலிங்கம், ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீவரதராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சற்குணதேவி , கனகராசா (கல்முனை), கமலேஸ்வரி,இரத்தினேஸ்வரி, இராசமலர்(ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2004) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நலர்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெட்டிலிப்பாய் லேன்,
குமரகோட்டம்,
கோண்டாவில். (28123)(36-11-16-18)
தகவல்: இ. சிறீஸ்கந்தராசா (சின்னகிளி).

யாழ்ப்பாணம்

# வீ.பீ. கிண்ணக் கிரிக்கெட் தொடர்: இறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பம்

ஆஸ்திரேலியாவில நடைபெறும் வீ.பீ கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதலாவது இறுதிப் போட்டி மெல்போர்ன் மைதானத்தில் இன்று நடைபெறுகின்றது.

இந்தியா, ஆஸ்திரேலியா, ஸிம்பாவே அணிகள் பங்கேற்ற முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் லீக் சுற்று கடந்த செவ்வாயன்று முடிவடைந்தது. ஸீத் ஸ்ரீக் தலைமையிலான ஸிம்பாப்வே அணி எட்டுப்போட்டிகளில் விளையாடி ஒன்றிலும் வெல்லாமல் தொடரை விட்டு வெளியேறியது.

37 புள்ளிகளைப் பெற்ற ஆஸ்திரேலிய அணியும், 29 புள்ளிகளைப் பெற்ற இந்தியாவும் இறுதிப் போட்டிகளுக்குள் நுளைந்தன.

இறுதிச் சுற்றில் 3 போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் இரு போட்டிகளை ஒரே அணி வென்றால் மூன்றாவது போட்டி நடைபெறமாட்டாது.

முதல் இறுதிப் போட்டி மெல்போர்ன நகரில் இன்று நடைபெறவுள்ளது. இரண்டாவது போட்டி நாளை மறுதினம் சிட்னியில் நடைபெறவுள்ளது. மூன்றாவது போட்டியை 10 ஆம் திகதி பிரிஸ்பேனில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தொடரில் ஆஸ்திரேலியா ஒரே ஒரு போட்டியில் மாத்திரம் தோல்வியுற்றது.

இந்தியா 5 போட்டிகளில் வென்றது. ஆஸ்திரேலியாவுடனான இரு போட்டிகளில் வெற்றிபெறும் வாய்ப்பை நூலிழையில் தவறவிட்டது இந்திய அணி. (ஐ)

# ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் தென் ஆபிரிக்க அணி சம்பியன்

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான ஒருநாள் கிரிக்கெட் தொடரில தென்னாபிரிக்க அணி 3 -1 விகிதத்தில் வென்றது. இத்தொடரின் 5ஆவதும இறுதியுமான போட்டியில் 4 விக்கெட்டுகளால் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் தென்னாபிரிக்கா 304 ஓட்ட இலக்கைக் கடந்து வென்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் ஜெஹரான்ஸ்பர்க் நகரில் பகல் - இரவு ஆட்டமாக இப்போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது

அவ் வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கிறிஸ்கையில், சிவ்நாரின் சந்தர்போல் இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி முதலாவது விக்கெட்டுக்காக 193 ஓட்டங்களைக் குவித்தனர்.

50 ஓவர்களில் மேற்கிந்திய அணி 2 விக்கெட் இழப்பிற்கு 304 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 31 ஓட்டங்களைப் பெற்றநிலையில் முதலாவது விக்கெட்டை இழந்தது. எனினும், இரண்டாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த ஜக்கலிஸும், கிறேம் ஸ்மித்தும் 101 ஓட்டங்களைப் பெற்றனர். ஸ்மித் 60 பந்துகளில 58 ஓட்டங்களைப பெற்றார்.

கடைசியில் இரு ஓவர்களில் தென்னாபிரிக்க அணிக்கு 9 ஓட்டங்கள் தேவைப் பட்டன. 49 ஆவது ஓவரை வீசிய ரவி ராம்போல் அந்த ஓவரில் ஒரு ஓட்டத்தை மாத்திரம் கொடுத்து ஜக்கலிஸின் விக்கெட்டையும் கைப்பற்றினார்.

இறுதி ஓவரை கிறிஸ்கைல் வீசினார் அவருக்கு மேற்கிந்திய வீரர்களின களத்தடுப்பு மிகவும் ஏமாற்றமளித்தது.

ஷோன் பொலக் அடித்த முதலாவது பந்தை 2 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தும் வாய்ப்பை ஹாலி தவறவிட்டார். அப்பந்து எல்லைக் கோட்டை கடந்தது.

அடுத்த பந்தில் பொலொக் 2 ஓட்டங் களைப் பெற்றார். அதற்கடுத்த பந்தில் சிக்ஸர் அடித்தார் பொலொக். இதனால் 49.4 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 310 ஓட்டங்களை பெற்றது தென்னாபிரிக்கா. 5 ஆவது போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் இத்தொடரின் சிறப்பாட்டக்காரராகவும் ஜக்கலிஸ் தெரிவு செய்யப்பட்டார்.

## மெய்வன்மை போட்டி

வடமராட்சி,பெப்.6

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உபஅதிபர் திருமதி எஸ்சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி மலர்விழி சிவாஜிலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

(எ-173)

## மாதகல் தேவாலயத்தில் பெருவிழா

மாதகல், பெப்.6

மாதகல் கடற்கரையில் நூற்றாண்டுகாலமாக அமைந்துள்ள புராதன ஆலயமான புனித லூர்து அன்னை தேவாலயத்தில் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி நற்கருணைத் திருவிழாவும் தேர்ப் பவனியும் திருப்பலியும் இடம்பெறும். மறுநாள் திருவிழா திருப்பலி இடம்பெறும். (ஐ-95)

# ஒலிம்பிக்கில் 5 தங்கப்பதக்கங்கள் வெல்வேன்

## மேரியன் ஜோண்ஸ் தெரிவிப்பு

இவ்வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் நான் 5 தங்கப்பதக்கங்களை வெல்லும் சாத்தியமுள்ளது.

இவ்வாறு அமெரிக்க மெய்வன்மை வீராங்கனையான மேரியன் ஜோண்ஸ் கூறியுள்ளார்.

2000ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 3 தங்கப்பதக்கங்களையும் 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்றவர் மேரியன் ஜோண்ஸ்.

கடந்த ஜூன் மாதம் ஒரு குழந்தைக்கு தாயான ஜோண்ஸ், 2002ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தின்பின் போட்டிகளில் பங்கு பற்றவில்லை ஆனால் இன்று அமெரிக் காவில் நடைபெறும் 60 மீற்றர் ஓட்டப் போட்டியொன்றில் அவர் பங்குபற்றவுள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் ஓகஸ்ட மாதம் ஏதென்ஸ் நகரில் ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் போட்டிகள் குறித்து ஜோண்ஸ் கூறுகையில்,

"ஏதென்ஸ் ஒலிம்பிக் குறித்து இப்போதே உறுதியாகக கூறமுடியாது. ஆனால் 4 அல்லது 5 தங்கப் பதக்கங்களைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது" - என்றார்.

கடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர், 4 X 400 மீற்றர் போட்டியில் தங்கப் பதக்கத்தையும் நீளம் பாய்தல், 4 x 100 மீற்றர் போட்டிகளில் வெண் கலப் பதக்கங்களையும் ஜோண்ஸ் வென்றார்.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை அமிர்தலிங்கம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அமிர்தலிங்கம் அவர்கள் 04.02.2004 புதன்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகம்மா தம்பதியினரின் பாசமிகு கனிஷ்ட புதல்வனும் செல்லையா - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் நிஷாந்தினி, துஷாந்தினி (மகாஜனாக் கல்லூரி மாணவிகள்) அகியோரின் பாசமிகு தந்தையும் மகாலிங்கம்(ஆஸ்திரேலியா), கணேசலிங்கம் (சுவிஸ்), சோதிலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விவேகானந்தராணி (ஆஸ்திரேலியா), தவமணிதேவி (சுவிஸ்), ஜிக்கி (ஜேர்மனி), சிவகுமார் (பெரிசு), வரதகுமார் (சுவிஸ்), சசிகரன், வில்வராஜா, உமாதேவி (லண்டன்), இரத்னேஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2004) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம 12.00 மணியளவில் அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*கூத்தன் சீமா சந்தை அருகில்,*
*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.*(23134) (38-13-16-36)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் , மைத்துனர்கள்.

### திருமதி சோதிப்பிள்ளை அருணாசலம்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிப்பிள்ளை அருணாசலம் அவர்கள் 04.02.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற க. அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி கௌசலாதேவி அரியரத்தினம் (கொழும்பு), ஸ்ரீதரன் J.P. (தேசிய வடிகாலமைப்புச் சபை உத்தியோகத்தர்), ஸ்ரீகாந்தன்( அதிபர், யா/ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ந.அரியரத்தினம்(M.L.T., மொறட்டுவ மெடிக்கல் சென்ரர்), திருமதி பாலாம்பிகை, திருமதி சர்வேஸ்வரி(பிரதி அதிபர், யா/சண்டிலிப்பாய் இந்துக கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.02.2004) வியாழக்கிழமை பி.ப. 5.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*'ஜோதிவாசா', ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் மேற்கு,கொக்குவில்.*(28137)(36-13-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

(சின்னப்பிள்ளையார்)

எண்ணைக்காப்பு

பருத்தித்துறை சின்னப்பிள்ளையாருக்கு அடியார்கள் 6.2.2004 வெள்ளிக்கிழமை தொடக்கம் 7.2.2004 சனிக்கிழமை பகல் 12 மணி வரை எண்ணைக்காப்பு சார்த்தி மகிழ்வித்து விநாயகரின் அருளைப் பெற்று உய்வீர்களாக.

(28138)(36-16) - தர்மகர்த்தா.

## ஓராண்டு நினைவுகளுடன்

தோற்றம் 16 05 1945



மறைவு 18 01 2003

அமரர்

**பொன்னம்பலம் குணபாலசிங்கம (பாலசிங்கம்)**

திதி 06.02.2004

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எமது துயரம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் உங்கள் இலட்சியம் போற்றி வாழ்கின்றோம்.

*26/7, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம்,*
*யாழ்ப்பாணம்.* (28127)(16-13-36-37)

மனைவி, பிள்ளைகள்.

### தவறிவிட்டது

வே.நடராசா என்பவருடைய பேர்ஸுடன் சாரதி அனுமதிப்பத்திரம் (பணம் இல்லை) யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 118, ஸ்ரான்லி வீதி அல்லது 2485, 0777 - 271334 இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (28136)


இன்றைய வெளியீடு
V.C.D. Songs
புதுக்கோட்டையிலிருந்து சரவணன்
கோவில்
காதல் கிறுக்கன்
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்
T.P.-021-222-2884.
(C33139) (12)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த் நடித்த
ஜேஜே
(ரீகல்ஸ்)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(சி-33050) (18)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
அர்ஜுன், சிம்ரன், நாசர், வடிவேல் நடித்த
ஒற்றன் (ரீல்ஸ்)
காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே.)

லிபேட்டி அச்சுவேலி
அர்ஜுன், சிம்ரன், மும்தாஜ் நடித்த
ஏழுமலை
காட்சிகள்.: 3.00, 7.00. (பு.நே.)
(C/333049)

நிரஞ்சனாஸ் சங்கானை
சிம்பு, ஷர்மி நடித்த
காதல் அழிவதில்லை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45(பு.நே)
HULK
(C-329881) (36)

ஒலிப்பாடல் தொகுப்புகள் வெளியீட்டு விழா
நிதர்சனம் நிறுவனத்தின் தர்மேந்திரா கலையகத்தின் சிறப்பு வெளியீடுகளாய்...
தாயக கலைஞர்களும்
புலம்பெயர்ந்த கலைஞர்களும்
இணைந்த இசை சங்கமம் ...
ஊர் போகும் மேகங்கள்
கேணல் கிட்டு பீரங்கிப் படையணியினதும்
லெப்.கேணல் குட்டிசிறீ மோட்டார் படையணியினதும்
பதிவுகளைத் தாங்கிய
வரும்பகை திரும்பும்
ஒலிப்பாடல் தொகுப்புகள்
காலம் - இன்று(06.02.2004) வெள்ளிக்கிழமை
நேரம் - மாலை 4.30 மணி
இடம் - யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்
அனைவரும் வருக!
அன்புடன்
தர்மேந்திரா கலையகம்
நிதர்சனம்.
(28133)(36-16-13)

# மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வாருங்கள்!

## ஜனாதிபதிக்கு மாவை எம்.பி. அவசர கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.6

வலி. வடக்கு மற்றும் தென்மராட்சியில் இடம்பெயர்ந்த மக்கள் மேற்கொண்டுவரும் சாத்வீகரீதியான போராடடம் தொடர்பான விவகாரத்தில் உடன் தலையிட்டு தீர்வைக் காண முன்வர வேண்டும்.

இப்படி அவசர கோரிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் விடுத்துள்ளார் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நேற்று அனுப்பிய அவசர கடிதத்திலேயே அவர் இப்படிக் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குடாநாட்டின் வலி. வடக்கு, கோயிலாக்கண்டி, தனங்களப்பு, மறவன்புலவு போன்ற பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. 10 வருடங்களுக்கு மேலாக அந்த மக்கள் பெரும் கஷ்டமான, இக்கட்டான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மக்களை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி வலி.வடக்கில் 12 பேரும் தென்மராட்சியில் இருவரும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

எரியும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண தாங்கள் உடன் முன்வர வேண்டும். இந்தப் போராட்டத்திற்கான காரணத்தை ஆராய்ந்து அந்த மக்களின பிரச்சினைக்கு தீர்வுகண்டு அவர்களின் உயிரைக் காப்பாற்றுங்கள்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும் இந்த விடயத்தில் உடன தலையிட்டு நியாயம் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக மாவை சேனாதிராசா பிரதமர் அலுவலகத்துடனும் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். (ஐ-3)

# 'சயனைட்' அணிந்து சென்ற 2 புலிகள் தடுக்கப்பட்டனர்

## ஓமந்தை சோதனைச் சாவடியில்

வவுனியா,பெப்.6

வன்னியிலிருந்து வவுனியாவுக்குச சென்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் படையினரால் ஓமந்தை சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் கைது செய்யவும் படையினர் முயன்றுள்ளனர். சயனைட் குப்பிகளை அணிந்திருந்ததாலேயே இருவரையும் படையினர் தடுத்துநிறுத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல் இச்சம்பவம் இடம பெற்றது.

ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வவுனியாவுக்கு வரும் புலிகள் சயனைட் குப்பி அணிந்திருந்தால் அவாகளைக் கைதுசெய்யுமாறு தமக்கு தமது உயர்பீடத்திலிருந்து கட்டளை வந்திருப்பதாகக் கூறிய படையினர் இரு புலி உறுப்பினர்களையும் கைது செய்ய முயன்றுள்ளனர்.

எனினும், அந்த இரு போராளிகளும் அதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், அங்கு சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது. இது குறித்து வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அங்கு வந்த எழிலன் சயனைட குப்பி அணிந்து செல்லும் விடுதலை புலிகளைக் கைது செய்யப் படையினருக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்று படை அதிகாரிகளிடம் தெரிவிததார்.

இந்தச் சம்பவம் குறித்து அறிந்து கொண்ட கண்காணிப்புக்குழு அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து இரு தரப்பினருக்கும் இடையில் சமரச முயற்சிகளில் ஈடுபட்டனர். பின்னர் மாலை 5.30 மணியளவில் போராளிகள் இருவரும் சயனைட் குப்பிகளுடன வவுனியாவுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஐ-4)

## மயக்கமுற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரியான பயணபோஸ் நேற்று மாலை உண்ணாவிரதிகளைச் சந்தித்தார்.

உண்ணாவிரதிகளின் கோரிக்கை தொடர்பாக யாழ்.கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவை இன்று தான் சந்திக்கவிருப்பதாகவும் அதன் பின்னர் அவரின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதாகவும் அவர் உண்ணாவிரதிகளிடம் தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ் அலுவலக அதிகாரியான ஆர்பி. சந்திரசேகரா வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

உண்ணாவிரதம் தொடர்பாகத் தமது தலைமையகத்துக்கு அறிவித்துள்ளதாகவும் -

ஆணைக்குழுவின் சபை இன்று கூடி இது விடயமாக ஆராயவுள்ளதாகவும் - சந்திரசேகரா தெரிவித்துள்ளார். (ஐ-3-86)

## சிறுவன் படுகாயம்!

கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் சிறுவன் ஒருவன் கையில் படுகாயம் அடைந்தான். கடந்த செவ்வாய்க்கிழமை நெடுங்கேணியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நெடுங்கேணி, வவுனியா வீதியைச் சேர்ந்த எஸ்.வித்தகன் (வயது-15) என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளான். புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இச்சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டான்.(4-6)

## உடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினரும் நேற்றுக்காலை வரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் சுதந்திரதினத்தையொட்டி தேசியக்கொடி ஏற்றப்பட்டது. அதன்பின் அங்கு பொலீஸ் காவல் போடப்பட்டது. மாலையில் பொலீஸ் காவல் வாபஸ் பெறப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த சம்பவத்தை அடுத்து மீண்டும் அங்கு பொலீஸ் காவல் போடப்பட்டது. (ஐ-3-150)

# உண்ணாவிரத

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஈடுபட்ட பெண்கள் உட்பட ஏனையோர் வாகனத்தைச்' சூழ அமர்ந்து, தமக்குச் சரியான பதிலைத் தரவேண்டும் என்று கோரி அவர்களைத் தடுத்து வைத்தனர்.

இந்த உண்ணாவிரதம் குறித்து தமது குழுவின் தலைவருக்குத் தகவல் கொடுத்துள்ளதாகவும் -

பதில் கிடைத்ததும் தெரிவிப்போம் என்றும் - அவர்கள் உண்ணாவிரதிகளிடம் தெரிவித்தனர். அதையடுத்து, உண்ணாவிரதிகளின் கோரிக்கையை ஏற்று வாகனத்தைச் செல்ல ஏனையோர் அனுமதித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 8 மணிககுத் தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்த 12 பேரில் பலர் சோர்வு நிலையில் காணப்பட்டனர்.

தினமும் மாலையில் இவர்கள் வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இந்நிலையில் -

தொடர் உண்ணாவிரதம் மேற்கொள்பவர்களை படை அதிகாரிகள் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். உண்ணாவிரதி ஒருவரை யாழ். மாவட்டத் தளபதி கலந்துரையாடலுக்கு அழைக்கிறார் என்று படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வேறு எங்கும் வந்தும் படை தளபதியைத் தாம் சந்திக்க விரும்பவில்லை என்று அவர்கள் அதற்கு மறுத்துவிட்டனர்.

தேவையானால் தளபதி நேரில் இங்கு வந்து எம்முடன் கலந்துரையாடலாம் என்று உண்ணாவிரதிகள் தெரிவித்தனர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் உண்ணாவிரதிகளைச் சந்தித்தார்.

உண்ணாவிரதம் குறித்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்று மாவை சேனாதிராசா தெரிவித்தார்.(ஐ-3-150)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பகுதியில் தேசியக் கொடி நேற்றுக் கட்டப்பட்டது என்றும் -

அந்தக் கொடியை அறுக்க புலிகளின் பொறுப்பாளர் முயன்றார் என்றும் - படைத்தரப்பில் காரணம் கூறப்பட்டது.

தெல்லிப்பழை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்று நண்பகல் சந்தித்தார்.

புலிகளின் பிரதேசப் பொறுப்பாளா தாக்கப்பட்டமை தொடர்பாகத் தமது கடும் ஆட்சேபத்தை அவர் பொலீஸ் அதிகாரியிடம் தெரிவித்தார். (ஐ-3-150)


**SUBRA**
சித்தன்கேணி
(Gove Reg.)
பேச்சு ஆங்கிலம்
By.
**BRITTO**
புதிய பிரிவு
06-02-2004
மாலை 4.00 மணி.
(சி-33032)

**வேலை ஆள்கள் தேவை**
★ ரீ மேக்கர்
★ சப்ளையர்ஸ்
★ மேற்பார்வையாளர்
★ சமையல் உதவியாளர்
★ கணக்காளர்
★ ரொட்டி மேக்கர்
தொடர்பு:
திறி ஸ்ரார் ஹோட்டல்
162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-33141) T.P.: 021 222 3590

**SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்**
இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP — Duration 6 Months
DIPLOMA IN DESKTOP PUBLISHING — Duration 4 Months
DIPLOMA IN COMPUTER PROGRAMMING — Duration 12 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING — Duration 4 -5 Months
DIPLOMA IN VISUAL BASIC — Duration 4 Months
DIPLOMA IN VISUAL FOXPRO — Duration 4 Months
DIPLOMA IN AUTOCAD — Duration 4 Months
DIPLOMA IN C++ — Duration 5 Months
DIPLOMA IN NETWORK ENGINEERING — Duration 4 Months
புதிய பிரிவு ஆரம்பம் 07.02.2004
**Soft View Computer College**
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170
scclanka@hotmail.com
Arya Gowdar Road,
West mambalam Road,
Chennai 600 033, India.
T.P: +91-44-4891286

**ஒலி பெருக்கி சாதனங்கள் விற்பனைக்கு**
01. SSB 60 M அம்பிளிபயர்கள்
02. SSB 80 EM அம்பிளிபயர்கள்
03. SSA 100 M அம்பிளிபயர்கள்
04. SSA 160 M அம்பிளிபயர்கள்
05. SSA 5000 M அம்பிளிபயர்கள்
06. BTZ 7000 அம்பிளிபயர்கள்
07. AMX 912 9 சனல் மிக்சர்கள்
08. DMX 20 எக்கோ மிக்சர்கள்
09. மைக் வகைகள்
10. மைக் ஸ்ராண்ட் வகைகள்
11. HMT 30 லைன் ரான்ஸ்பர்கள்
12. 24" நீள கோண்கள்
18" நீள கோண்கள்
கட்டைக் கோண்கள்
தொடர்பு: கோபுரம் சவுண்ட்ஸ், அகுஜா ஒலிபெருக்கி சாதனங்கள்.
விற்பனையாளர் : M.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(28007)(30-13-38-16)

**விசேட வகுப்பு**
ஆசிரியர் போட்டிப்பரீட்சை
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
6/2-Fri 4p.m.-7/2 Sat. 1p.m.(புநே)
கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவனம்
6/2-Fri 7a.m.-7/2 Sat. 7a.m.(புநே)
ஆசிரியர்: திரு. P.உமாசங்கர்
(28131)

**விக்னா கல்வி நிறுவனம்**
O/L SAT,SUNDAY வகுப்புகள்
தூரதேச மாணவர்கள் நலன் கருதி
ஆரம்பம் : 7.2.2004 (8.30-2.00)
O/L DAY CLASS
பிரிவு 1 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(8.30 - 2.00).
பிரிவு 2 மிக விரைவில்.
(28126)

**BARATHY**
சித்தன்கேணி
SPOKEN ENGLISH
LECTURED:-
By. NISHANTHAN
(DIP.IN ENGLISH)
புதிய பிரிவு:
சனி, ஞாயிறு 4.00 p.m.
அனுமதியினை 7.2.2004இல் பெற்றுக்கொள்ளவும்.
பிரிவு I, பிரிவு II வழமையான நேரப்படி நடைபெறுகின்றன.
(28082)

**Lingam master - swiss**
சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutseh - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss.
(26642)(36-12)

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையின் ஆதரவுடன்
யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறையினர் நடத்தும்
யாழ். மாவட்ட மகளிர் மட்டும் பங்குகொள்ளும்
**விளையாட்டு விழா ஆரம்பமாகின்றது**
ஆரம்பமாகும் நாள் - 9 ஆம் திகதியில்
1.கிளித்தட்டு
2.கரப்பந்தாட்டம்
10 ஆம் திகதியில் - மெய்வல்லுநர் நிகழ்ச்சியும் பரிசளிப்பு விழாவும்
இடம்: யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அரங்கு
நேரம்: தாயக நேரப்படி 9 மணிமுதல் 6 மணிவரை
★ பங்குகொள்ளும் வீராங்கனைகளுக்கான விசேட வாகனம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கோட்ட அரசியல்துறை மகளிரோடும் விளையாட்டு அதிகாரிகளோடும் தொடர்புகொள்ளவும்.
★ வெற்றி பெறும் முதலாம், 2ஆம் இடத்தை பெறுபவர்கள் தமிழீழத்தில் 8 மாவட்டத்தையும் சேர்த்து நடத்தப்படும் போட்டியில் பங்குகொள்வர்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மகளிர் அரசியல்துறை,
யாழ். மாவட்டம்.
(சி-33132)(18-13-30-38)
விளம்பர அனுசரணை:
தமிழீழ விளையாட்டுத்துறை,
யாழ். மாவட்டம்.


## மரண அறிவித்தல்

### கந்தையா வடிவேலு (பூராசா)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா வடிவேலு நேற்று (05.02.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லக்கிளி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுபத்திரை, பூமணி, கனகரத்தினம் மற்றும் இரத்தினம், தணிகாசலம், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மாவதியின் அன்புக் கணவரும் காண்டீபன் (டோகா), கஜன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு. (28141)(36-16-30-38)

தகவல்:
க.தணிகாசலம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.